Phone No. 3249 மலாய் 10-சதம் பர்மா 0-1-6 இலங்கை 7-சதம்

TAMIL MANI REGD. NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 6 ஓசை 47 | சென்னை—விஷு-ஆல் புரட்டாசிமீ 12உ ஞாயிற்றுக்கிழமை (28—9—41) | விலை ஒரு அணா

: தர்ம சங்கடம்! :

இந்த யுத்தத்தில் தர்ம சங்கடமான நிலைமையில் அகப்பட்டுக்கொண்டு தவிப்பது துருக்கி; துருக்கி இன்னமும் நடுநிலைமை வகித்து வருகிறது. ஆனால், அதை எப்படியும் யுத்தத்தில் இழுத்துவிட நாஜி ஓநாய்; ஓயாமல் சதி செய்து வருகிறது. துருக்கி இந்த யுத்தத்தில் சம்பந்தப்படாமல் ஒதுங்கி இருக்குமே யானால், ஜெர்மன் ஓநாயே துருக்கிமீது திடீரெனப் பாய்ந்தாலும் பாயலாம்! இந்த நிலைமையில் துருக்கி, நாஜி ஓநாயை எதிர்த்துச் சுடுவதா, அல்லது இனிமேலும் நடு நிலைமை வேதாந்தம் பேசிக்கொண்டிருப்பதா? துருக்கியின் சங்கடமான நிலைமைக்கு இதுதான் காரணம். ரஷிய காகாஸஸ், இராக், இரான் முதலிய இடங்களிலுள்ள எண்ணெய்க் கிணறுகள் மீதுதான் நாஜியர் கண்ணோட்டம். இவற்றிற்கு வழி ஒன்று ரஷியா, மற்றொன்று துருக்கி. ரஷிய யுக்ரேய்ன் வழியாக ஜெர்மன் படைகள் வரலாம்; அதே சமயத்தில் கருங்கடல் வழியாகவும் ஜெர்மன் படைகள் கிழக்கே நுழையலாம். இத் திட்டப்படி வேலை செய்வதாக இருந்தால், கட்டாயம் துருக்கியை ஜெர்மனி தாக்கியே தீரவேண்டும். நாஜி ஜெர்மனி, துருக்கியைத் தாக்குமா, துருக்கி ஜெர்மனியை எதிர்த்து யுத்தஞ் செய்யுமா, அல்லது பணிந்து ஜெர்மனிக்கு இடங் கொடுத்துவிடுமா? பொறுத்துப் பார்ப்போம்.

சொக்கநாதன்

தொடர் கதை

-: வெண் உருவம் யார்? :-

தஞ்சை அரண்மனையில் திடீரெனத் தோன்றி மறையும் மாய சேவகனைத் தேடி, கமலம் நந்தவனத்துக்குச் சென்றாள். அங்கு அவள் மாய சேவகனைக் காணவில்லை; பயங்கரமான ஒரு வெண் உருவத்தைக் கண்டு ஒரு புதருக்குள் பதுங்கினாள். அதே சமயத்தில், அதே புதருக்குள் கமலம் தேடிச் சென்ற மாய சேவகனும் வந்து சேர்ந்தான். மாய சேவகனைக் கண்டபின்தான் கமலம் தைரியமடைந்தாள். இன்றேல், அந்த வெண் உருவத்தைக் கண்டு பயந்து கூச்சலிட்டு, அரண்மனைக்கே ஓடியிருப்பாள். சிறிது நேரம் கமலமும், மாய சேவகனும் அந்தப் புதருக்குள் பதுங்கியிருந்து, அங்கு தோன்றிய வெண் உருவத்தைக் கவனித்தனர். அந்த வெண் உருவம் தெற்குப் பக்கஞ் சென்று மறைந்தது. அந்த உருவம் மீண்டும் நந்தவனத்துக்கு வரக் கூடுமென்று எண்ணி, மாய சேவகனும், கமலமும் அந்தப் புதருக்குள் சிறிது நேரம் பதுங்கியிருந்தனர். அந்த வெண் உருவம் மீண்டும் அங்கு வரவில்லை உடனே அவர்கள் இருவரும் புதருக்குள்ளிருந்து வெளியில் வந்து, அரண்மனையை நோக்கி நடந்தனர். கமலத்தை அந்தரங்க அறையில் சந்திப்பதாகக் கூறி, மாய சேகவன் கமலத்துக்கு விடை கொடுத்து அனுப்பினான். அந்த சமயத்தில் மாய சேவகனின் கூரிய கண்கள் பழைய மண்டபத்தின் பக்கம் திரும்பியது. உடனே கமலத்தைத் துரிதப்படுத்தி, அரண்மனைக்குப் போகும்படி சொல்லிவிட்டு, மாய சேவகன் அங்கிருந்த நந்தவனத்தில் புகுந்து மறைந்தான்!

மாய சேவகன் திடீரென மறைந்ததைக் கண்டு, கமலம் ஆச்சரியமடைந்தாள். மாய சேவகன் உத்திரவுப்படி அவள் அரண்மனைக்குச் செல்லாமல் நந்தவனத்துக்கே மீண்டும் சென்றாள். அவள் கண்ணோட்டமும் பழைய மண்டபத்தின்மீது பாய்ந்தது. அங்கு வேறொரு உருவம் ஆடி அசைந்து வந்ததைக் கண்டு கமலம் நந்தவனத்துக்குள் மறைந்தாள் நந்தவனத்தில் ஏற்கனவே மறைந்த மாய சேவகன் அவள் கண்ணில் படவில்லை; ஆகவே, அவள் மறைந்து, மறைந்து அங்கு புதிதாகத் தோன்றிய உருவத்தைப் பின் தொடர்ந்து சென்றாள். அந்த உருவம் நந்தவன வாசலை நோக்கி நடந்தது. வாசற்படியில் குந்தியிருந்து ஆழ்ந்து யோசித்தது; மீண்டும் எழுந்து, அரண்மனையின் வாசலைத் திறந்துகொண்டு அரண்மனைக்குள் பூனைபோல் பதுங்கிச் சென்றது. அந்த உருவம் மறைந்ததும், அதைப் பின் தொடர்ந்து செல்லும் நோக்கத்துடன், கமலம் வேகமாக அரண்மனையை நோக்கி ஓடினாள். அவள் அரண்மனை வாசலை அடைந்ததும், ஆகாயத்திலிருந்து குதித்ததுபோல் மாய சேவகன் அவளுக்கு எதிரே வந்து நின்றான்; அவனைக் கண்டதும் கமலம் திடுக்கிட்டுப் போனாள்; கமலம் அடிக்கடி மாய சேவகன் வேலைகளில் குறுக்கிட்டது, அவனுக்குப் பிடிக்கவில்லை. அதைப்பற்றிப் பக்குவமாகக் கமலத்துக்கு எடுத்துச் சொல்லி, அவளை எச்சரித்தான். அரண்மனைக்குள் சென்ற உருவத்தைப் பின் பற்றிச் செல்லக் கூடாதென்றும், அவள் நேரடியாக அவள் அறைக்கே போகவேண்டுமென்றும் சொல்லி, மீண்டும் கமலத்துக்கு விடை கொடுத்து அனுப்பினான். கமலம் வேண்டா விருப்பாக அவன் உத்திரவுக்குப் பணிந்து அரண்மனைக்குச் சென்றாள். ஆனால் கமலத்தின் அந்தரங்க ஆவல் மாய சேவகனைப் பின்பற்றிச் செல்ல வேண்டுமென்பதுதான்.

கமலம் அரண்மனைக்குள் சென்றதும், மாய சேவகன் நேரடியாகப் பழைய மண்டபத்துக்குச் சென்றான். மண்டபத்தின் மூலை முடுக்குகளெல்லாம் தேடினான். அன்றிரவு அந்த மண்டபத்தின் ஒரு மூலையில் சவம்போல் கிடந்த பெண்ணைக்கூட அங்கு காணவில்லை. அந்தப் பெண் பழைய மண்டபத்திலிருந்து எப்படியோ மாயமாக மறைந்து விட்டாள்! அந்தப் பெண் மறைந்ததைக் கண்ட பின்தான் மாயசேவகன் அவன் நிலைமையை உணர்ந்தான்; தன்னையே கடிந்து கொண்டான். அன்றிரவு அவனுக்குக் கிடைத்த தோல்வியைக் கண்டு வெட்கமடைந்தான், உடனே அங்கிருந்து புறப்பட்டான்; கமலம் அறைக்குச் செல்லும் அந்தரங்க வழியாகச் சென்றான். ஆனால், அவன் கமலத்தின் அறைக்குப் போகவில்லை; அந்தரங்க அறையில் உடகார்ந்து யோசனை போட்டுக் கொண்டிருந்தான்.

நந்தவனத்தில் புதிதாகத் தோன்றிய அந்த வெண் உருவம் யார்? அதுதான் மாய சேவகனுக்குப் புரியவில்லை. இரண்டாவது தோன்றிய உருவமும், முதலில் தோன்றிய வெள்ளை உருவமும் ஒன்றா; அல்லது, வெவ்வேறான உருவங்களா? வெண் ஆடை அணிந்த உருவத்துக்கு நந்தவனத்தில் என்ன வேலை? எந்த நோக்கத்துடன் அது வந்திருக்கக் கூடும்? தெற்கே சென்ற அந்த வெண் உருவம் மீண்டும் ஏன் நந்தவனத்துக்கு வரவில்லை? தெற்கே சென்ற அந்த உருவம் எங்கு சென்று மறைந்தது? மறைந்த அந்த வெள்ளை உருவத்துக்கும், அதற்குப் பின்னால் வந்து அரண்மனைக்குள் மறைந்த உருவத்துக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா? அந்த இரு உருவங்களும் பழைய மண்டபத்தில் சந்தித்துப் பேசி, புதிய சூழ்ச்சியில் இறங்கி இருக்குமா? அப்படியானால் அந்த சூழ்ச்சி என்ன? இரு உருவங்களும் மீண்டும் அரண்மனையில் சந்திக்குமா? இதுபோன்ற பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டே மாய சேவகன் அந்தரங்க அறையில் அங்கு மிங்கும் உலாவிக்கொண்டிருந்தான்.

மாய சேவகன் அந்தரங்க அறையில் இவ்வாறு யோசனை போட்டுக் கொண்டிருந்த அதே சமயத்தில், கமலத்தின் அறையில் பாட்டி மோகனா, கமலம் முதலியோர் மிகுந்த மனவருத்தத்துடன் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் மூவருக்கும் இன்னது செய்வதென்று தோன்றவில்லை; அந்த அறையிலிருந்து எவ்வாறு தப்பித்துக்கொண்டு போவதென்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. மாய சேவகனிடமே அவர்கள் மூவரும் அபார நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த நம்பிக்கையும் படிப் படியாகக் குறைந்து வந்தது. மாய சேவகனின் திறமையை அவர்கள் நன்றாக அறிவார்கள் ஆனால், மாய சேவகன் ஏன் இவ்வாறு காலங்கடத்திக் கொண்டு போகிறான் என்பதின் ரகசியத்தை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. மாய சேவகன் மனம் வைத்தால், அவர்களை அரண்மனையிலிருந்து வெளியில் அழைத்துக் கொண்டு போக முடிந்திருக்கும்; ஆனால், மாய சேவகன் அந்த வழியில் முயற்சிக்கவில்லை; அதற்காக அவன் வேலை செய்யவுமில்லை. இதுதான் கமலம், பாட்டி, மோகனா முதலியோரின் வருத்தத்துக்குக் காரணம். பாவம்! அவர்கள் பெண்கள்; அவர்கள் தனித்து என்ன செய்ய முடியும்? அவர்கள் தஞ்சை அரச குலத்தில் வந்தவர்கள்; தைரியம், உறுதி, துணிச்சல் இருந்த போதிலும், பழிக்கு அஞ்சினர். அவர்கள் அரண்மனையிலிருந்து தப்பித்துக்கொண்டு போய் விட்டால், தஞ்சை அரசரின் கதி என்னவாகும்? அவர்கள் மூவரின் கதியை எண்ணி, எண்ணி, தஞ்சை அரசர் உயிரை வதைத்துக் கொள்ளமாட்டாரா? இந்தக் கவலையே அந்த மூன்று பெண்களின் மனதில் நிறைந்திருந்தது.

ஆனால், பாட்டி உலக அனுபவம் வாய்ந்தவள்; தஞ்சை வீராதி வீரனின் மனைவி; அவள் என்னதான் கவலை கொண்டிருந்த போதிலும், அந்தக் கவலையை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. மோகனா, கமலம் இருவரிடமும் பாட்டி அளவு கடந்த அன்பு கொண்டிருந்தாள்; அந்த இரு பெண்களுமே பாட்டியின் இரு கண்மணிகள். அவர்கள் இருவருக்கும் பாட்டியே தஞ்சம். கமலமும், மோகனாவும் வருந்துவதைப் பாட்டி கண்டாள்; அவர்கள் வருத்தத்தை அறிந்து, அவர்களுக்குத் தைரியமூட்டத் துணிந்தாள்.

“கண்ணே!....கமலம்....அவனைக் கண்டாயா?...என்னதான் சொன்னான்?...”

“பாட்டி, அவரைக் கண்டேன்... ஆனால்...”

“எங்கே கண்டாய்?...”

“நந்தவனத்தில்தான்......ஆனால், அவர் என்னிடம் எதுவும் சொல்ல மறுத்துவிட்டார்......முன்போல்... அவருடைய காரியங்களை கெடுத்து விட்டதாகக் கோபித்துக்கொண்டார்...”

“ஆம்...அவன் கோபித்துக்கொண்டது சரிதான்......நான்தான் உன்னிடம் ஏற்கனவே சொன்னேனே;.. கேட்டாயா?......போக வேண்டாமென்று தடுத்தோம்...நீ எங்களையும் மீறிக் கொண்டு ஓடினாய்...”

“ஆம்...பாட்டி......என் தவறை உணர்ந்தேன்...ஆனால், நான்... அவருக்கு இடையூறாக இருக்க நினைக்கவில்லை...நான்... அவர்...”

“கண்ணே...நாங்கள் அதை அறியாமலல்ல......ஆனால், அவன் என்ன நினைத்திருக்கிறானோ ..என்ன வேலை செய்து வருகிறானோ?...நாம் கண்டோமோ?...நம்மைவிட அவன் புத்தியில் குறைந்தவனா?...அல்லது, வீரத்தில்தான் குறைந்தவனா?...”

“இல்லை...பாட்டி...ஆனால்,...

“இருக்கட்டும்...அவன் என்ன சொன்னான்?...”

(15-ம் பக்கம் பார்க்க)

ஆப்ரேஷனை நீக்குங்கள்

தொண்டையில் உள் நாக்கின் இரு பக்கங்களிலும் நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்களை

“டான்ஸிலிட்”

அற்புதமாய்க் குணப்படுத்தும்

விவரங்களுக்கு:— ஆலன்கிலினிக்

இராயப்பேட்டை, மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்.

மனோரதம்

எங்கே, எப்பொழுது!

கம்பன் இருந்தால்...?

அப்பாடா, கொடுமை!

குட்டிச் சுவரில் நெரி!

— எமலோகயாத்திரை! —

ராமாயண, பாரத யுத்தங்கள் நடந்ததோ, என்னமோ தெரியாது; நடந்திருந்தால், அந்த யுத்தங்கள் எப்பொழுது, எங்கே எப்படி நடந்ததென்பது தெளிவாக இல்லை; என்றாலும், அந்த யுத்தங்களைப்பற்றிக் கம்பர் போன்ற மகா கவிகள் அவர்களின் கற்பனா சக்தியால், பெரிய புராணங்கள் எழுதி வைத்துவிட்டுப் போயினர்; அந்தக் கம்பர்களும், கவிஞர்களும் இன்று இருந்திருந்தால், இந்த யுத்தத்தைப் பற்றி எப்பேர்ப்பட்ட கவிகளும், காவியங்களும் எழுதிவைத்திருப்பார்கள் தெரியுமா? அந்தக் கம்பனும், கவிஞர்களும் இன்று இல்லையே என்றுதான் வருந்துகிறேன். அவர்கள் பாடிவைத்த யுத்தங்கள் நடந்ததோ, நடக்கவில்லையோ தெரியாது; அந்த யுத்தத்தைப்பற்றி எவ்வளவு அழகாகத் தத்ரூபமாக எழுதி வைத்திருக்கிறார்கள். இன்று நம் கண்ணெதிரில் நடக்கும் யுத்தமோ, அப்பாடா, கொடுமை; மகா கொடுமை! இந்த யுத்தத்தைப்பற்றி சிந்திக்கக்கூட முடியவில்லை; இதைப் பற்றி எழுதக்கூடச் சக்தி இல்லை. அவ்வளவுக்குக் கொடுமையாகக் கர்ண கடூரமாக இந்த யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது!

ஃ ஃ ஃ

இந்த யுத்தத்துக்குச் சமீபத்தில் முடிவு உண்டா என்றால், அந்த முடிவைக்கூடக் காணோம்; யுத்தம் போகும் போக்கைப் பார்த்தால், இந்த யுத்தம் இன்னம் இரண்டொரு வருடங்களுக்கு நீடித்து நடக்குமென்றே தெரிகிறது. இரண்டொரு வருடங்களுக்குப்பின்பாவது சமாதானம் ஏற்படுமோ? அதுகூடச் சந்தேகந்தான்! இப்படியே யுத்தம் நடந்து கொண்டு போனால், உலக மக்களின் கதி என்ன ஆவது? அதோ கதிதான்! இப்பொழுதே மக்கள் கஷ்டம் சொல்லமுடியாது. வறுமையும், பசிப்பிணியும் தலைகாட்ட ஆரம்பித்து விட்டன. வர வரக் கஷ்டங்கள் அதிகரித்துக் கொண்டு போகுமேயொழிய, ஒரு போதும் குறையாது. இன்று அரை குறைப் பட்டினி கிடப்பவர்கள், இனிமேல் முழுப் பட்டினி கிடக்கத் தயாராக இருக்க வேண்டியதுதான்! ஏனெனில், அந்த நிலைமைக்கு இந்த யுத்தம் வந்தே தீரும். தென்னைமரத்தில் தேள் கொட்ட குட்டிச்சுவரில் நெரி கட்டியதாம்! எங்கேயோ நடக்கும் யுத்தம், நமது தலையில் வந்து விழுந்திருக்கிறது! அதற்காக நாம் பட்டினி கிடந்து மடிவது விசித்திரமல்லவா? காரணம் என்ன? நாம் அடிமைகள்; நமக்குச் சுதந்திரமில்லை; சுய நிர்ணய உரிமையில்லை. நமது நாடு யுத்த நாட்டிற்கு அடிமைப் பட்டிருக்கிறது. இந்த யுத்தம், அடிமை நாடுகளைப் பாதிப்பதற்கு இதுதான் காரணம். நம்மைத் தேடி வறுமை வருவதற்கும் இதுதான் காரணம். இனிமேல் இந்த வறுமை அதிகரிப்பதாக இருந்தால் கூட, அதற்கும் இதுதான் காரணமாக இருக்கும். இப்பொழுது இருந்துவரும் அரசியல் உரிமையை இழக்கவேண்டியிருந்தால் கூட, அதற்கும் இந்த யுத்தந்தான் காரணமாக இருக்கும்!

ஃ ஃ ஃ

இன்னொரு முக்கியமான விஷயம்; எமனைப்பற்றிய எச்சரிக்கை! எமன் எப்பொழுது வருவானென்று யாருக்கும் தெரியாது; யாரும் சொல்லவும் முடியாது; திருடன் சொல்லிக்கொண்டு வரமாட்டான்; அது போலவே எமனும் நம்மிடம் சொல்லிக்கொண்டு, நமது உயிரைத் திருட வரமாட்டான்! அதிலும், இந்த கலி காலத்திலோ எமனுக்குத் தொந்திரவே இல்லை! அவன் நம்மைத் தேடி வரவேண்டிய அவசியங்கூட இல்லை. எமன் வராமலே, நம்மை எமலோகத்துக்குக் கொண்டு போகக்கூடிய மோட்டார், ரயில் வண்டி, எலக்ட்ரிக்வண்டி, விமானங்கள், வெடி குண்டுகள் ஏராளமாக இருக்கின்றன! நமது உயிரை எமனிடம் கொண்டு போய்ப் பத்திரமாகச் சேர்த்துவிடும்! இன்றுதான் என்ன? தினசரி ஆயிரக்கணக்கில், லக்ஷக்கணக்கில் ஐரோப்பிய யுத்த முனைகளில் எமனுக்குப் பலியாகவில்லையா? இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் இது வரையில் பல லக்ஷக்கணக்கான மக்களின் உயிரை எமன் கொண்டு போகவில்லையா? இதையெல்லாம் அந்த பிரம்மன் ஆதிகாலத்திலேயே அறிந்திருந்தானா? அறிந்து, மக்கள் தலையில் அவ்வாறு எழுதிவைத்திருந்தானா? இவ்வித கொடிய யுத்தங்கள் வரும், அந்த யுத்தங்களில் விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள், வெடி குண்டுகள் முதலியவைகளைச் சரமாரி உபயோகிப்பார்கள்; அவைகளால் மக்கள் லக்ஷம் லக்ஷமாக மடிவார்கள் என்பது பிரம்மனுக்குத் தெரிந்துதானே இருக்க வேண்டும்! தெரிந்துதானே மக்கள் தலையில் அவ்வாறு எழுதியிருக்க வேண்டும்; அதிலும், இன்னின்னார் விமான வெடி குண்டுகளால் சாவார்கள்; இன்னின்னார், யுத்த டாங்கிகளில் அகப்பட்டு, நசுங்கி மடிவார்கள்; இன்னின்னார், துப்பாக்கி, பீரங்கி குண்டுகளுக்கு இரையாவார்கள் என்பதை பிரம்மன் அறிந்து தானே அவர்கள் தலையில் எழுதியிருக்கிறான்; அப்படியானால், பிரம்மாவுக்கு ஏற்கனவே இந்த ரகசியங்களெல்லாம் தெரிந்துதானிருக்க வேண்டும்! இதைப் பற்றி நன்றாக யோசித்துப் பார்த்தால், நமது தலையெழுத்தை நிர்ணயிக்கும் பிரம்மன் ரொம்பக் கெட்டிக்காரன் தான்! பிரம்மன் மட்டுமல்ல; எருமை வாகனத்தின்மீது அமர்ந்து, பாசக் கயிற்றை வீசி, உயிரைக் கொள்ளை கொள்ளும் எமனுக்குக்கூட கஷ்டம் குறைந்துவிட்டது! தினசரி, லக்ஷக் கணக்கான உயிர்களை ரொம்பச் சுலபமாகக் கொண்டு போகும் எமன் கூட நல்ல அதிர்ஷ்டசாலிதான்!

ஃ ஃ ஃ

இந்த எமனைப்பற்றியே இந்திய சர்க்கார் எச்சரித்திருக்கிறார்கள். வெளியில் சென்றால், உங்களுக்கு உள்ளது உரியதையெல்லாம் உங்கள் மனைவி, மக்கள் பேருக்கோ, அல்லது, உங்களுக்கு வேண்டியவர்கள் பேருக்கோ உயில் எழுதிவைத்து விட்டுப் போங்கள்; மோட்டார், ரயில் வண்டி எமன்கள் ஒருபுறமிருக்கப், புதிதாக வரப் போகும் எமனுக்குப் பயந்து இந்த முன்னேற்பாடு செய்து கொள்ளுங்கள்! ஐரோப்பாவில் நடக்கும் விமானத் தாக்குதல், இந்தியாவுக்கும் வந்து விட்டால் என்ன செய்வது? வெளியில் சென்றால், திரும்பி வருவீர்களோ, என்னமோ யார் கண்டது? திரும்பி வர முடியாது போனால், அல்லது, உயிருடன் திரும்பி வரக் கூடிய நிலைமையில் இல்லாது போனால், அதற்கு இந்திய சர்க்கார் ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்கள். "விமானத் தாக்குதலினால், காயமடைந்தாலோ, அல்லது, மரணமடைந்தாலோ, யாருக்கு உடனே தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அந்த நெருங்கிய உறவினர், அல்லது, நண்பர் பெயர், விலாசத்தை ஒவ்வொருவரும் எழுதி அவர்கள் ஜேபியிலோ, மடியிலோ வைத்துக்கொண்டால் நல்லது!" என்று சர்க்கார் யோசனை சொல்லியிருக்கிறார்கள். இது வெறும் முன் ஜாக்கிரதை ஏற்பாடு; அப்படி விமானத் தாக்குதல் ஏற்பட்டுவிடுமென்று நினைத்துவிடாதீர்கள்; பயந்துவிடவும் வேண்டாம். வெறும் முன் ஜாக்கிரதை! வெறும் யோசனை! அப்படியே விமானத் தாக்குதல் ஏற்பட்டுவிட்டால், உயிருடன் கூடிய உங்கள் உடலையோ அல்லது உயிரை இழந்த உங்கள் உடலையோ தேடிப் பிடிக்கச் சௌகரியமாக இருக்குமே என்பதற்காகத்தான் சர்க்கார் இந்த யோசனை சொல்லியிருக்கிறார்கள்! வேறு எதற்குமல்ல. சர்க்கார் சொல்லியிருக்கும் இந்த யோசனையை எல்லோரும் கவனிக்கவேண்டும்;

ஃ ஃ ஃ

சர்க்கார் சொல்லியிருக்கும் இந்த யோசனையிலிருந்து யுத்த நிலைமை என்ன, இந்த யுத்தம் எங்கெல்லாம் பரவக்கூடும் என்பதை ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம். ஐரோப்பா எங்கும் யுத்தம் பரவிவிட்டது. ஐரோப்பாவைக் கடந்து, ஆப்ரிக்கா, அரேபியா நாடுகளுக்கும் வந்துவிட்டது; ரஷியா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகள்கூட யுத்தத்தில் அகப்பட்டுக் கொண்டன. கிழக்கே தப்பியிருப்பது ஆப்கானிஸ்தானமும், இந்தியாவுந்தான். இந்த இரு நாடுகளும் எவ்வளவு காலத்துக்குத் தப்பியிருக்குமோ சொல்ல முடியாது. மேற்கே இந்த யுத்தத்தில் ஈடுபடாமலிருப்பது அமெரிக்காவும், தென் அமெரிக்க நாடுகளுமே; அந்த நாடுகள்கூட யுத்தத்துக்குத் தயாராக இருக்கின்றன; யுத்த ஏற்பாடுகளும் செய்து வருகின்றன. இதுவரையில் நடு நிலைமை வகித்துவந்த அமெரிக்கா நடு நிலைமையைக் கைவிட்டு, இந்த யுத்தத்தில் பகிரங்கமாக இறங்க யோசனை போட்டுக் கொண்டிருக்கிறது; சீக்கிரத்தில் அமெரிக்காவும் யுத்தத்தில் இறங்கலாம். ஏற்கனவே அமெரிக்கா அச்சு நாடுகளுடன் கடல்

(அடுத்த பக்கம் பார்க்க)

பாகனேரி நாட்டார் விடுதி.

கப்பல் பிரயாணிகளுக்கு தங்குவதற்கு சௌகரியம் செய்து கொடுக்கப்படும்.

நெ. 73, லிங்கி செட்டி தெரு, மதராஸ்.

மானேஜர், வெ. ரெங்கசாமி நாயுடு.

மனோரதம் ★ (முன் பக்கத் தொடர்ச்சி)

பிரம்மன் கெட்டிக்காரன்! - எமன் அதிர்ஷ்டம்!

உயில் எழுதி வையுங்கள்!

சீப்பை ஒளித்துவிட்டால்...?

தலையெழுத்து நல்லதா?

யுத்தத்தில் இறங்கிவிட்டது; இனிமேல், அமெரிக்கப் படைகள், சகல ராணுவங்களுடனும், விமானப் படைகளுடனும், டாங்கிகள், யுத்த தளவாடங்களுடனும் ஐரோப்பாவுக்கு வந்து, நேரடியாக அச்சு நாடுகளுடன் போர் ஆரம்பிக்கவேண்டியதுதான் பாக்கி. அதுவும் அதிசீக்கிரத்தில் வந்துவிடும். இந்த வருடத்துக்குள் அந்த நிலைமை ஏற்படாது போனாலும், அடுத்த வருடத்திலாவது ஏற்பட்டுத்தான் தீரும் அதற்குச் சந்தேகமே வேண்டாம் அமெரிக்கா இந்த யுத்தத்தில் இறங்காமலிருந்தால் கூட, நாஜி ஜெர்மனியும், இதாலியும் அமெரிக்காவை வலிய இந்த யுத்தத்தில் இழுத்து விடத்துணிந்திருக்கின்றன. அதற்காகவே, நாஜி சப்மரையன்கள் அமெரிக்கக் கப்பல்களை மூழ்கடித்து வருகின்றன. சமீபத்தில்கூட "பிங்-ஸ்டார்" என்ற ஒரு பெரிய அமெரிக்கக் கப்பலை, ஐஸ்லந்துக்குச் சமீபத்தில் ஜெர்மன் சப்மரையன் மூழ்கடித்தது. ஏன்? அமெரிக்காவையும் இந்த யுத்தத்தில் மாட்டிவிடத்தான்! பிரிட்டனை ஜெயித்த பின், அமெரிக்காமீது படையெடுக்கத்தான் நாஜி ஜெர்மனி யோசனை போட்டுக்கொண்டிருக்கிறது; அந்த யோசனையை இப்பொழுதே அனுஷ்டானத்தில் கொண்டு வருகிறது; அவ்வளவுதான். இன்னம் சிறிது காலம் கடந்து அமெரிக்காவைத் தாக்குவதைவிட, இப்பொழுதே தாக்கினால் என்ன? இப்பொழுதே அமெரிக்கக் கப்பல்களை மூழ்கடித்துவிட்டால், அமெரிக்காவின் பலம் குறைந்துவிடும்; ஜெர்மனியின் அபார பலத்தை அமெரிக்கா நன்கு அறிந்து கொள்ளும்; அறிந்தபின் ஜெர்மனிக்குப் பணிந்து போனாலும் போகலாம்; இதுதான் ஜெர்மனியின் எண்ணம்! சீப்பை ஒழித்துவிட்டால், கலியாணம் நின்று விடுமென்பது நாஜி ஜெர்மனியின் நினைப்பு! அது அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறது; நினைக்கக் கூடாதென்று யாராவது ஜெர்மனியிடம் சொல்ல முடியுமா?

ஃ ஃ ஃ

நாஜி ஜெர்மனியின் தலையெழுத்து நல்ல எழுத்தாக இருந்தால், அது ரஷியாவிடம் போய் இந்தச் சமயத்தில் அகப்பட்டுக் கொள்ளுமா? ரஷிய யுத்தம் ஆரம்பித்து 14 வாரங்கள் கடந்து, 15வது வாரம் ஆரம்பித்து விட்டது சுமார் மூன்று மாதங்களாகியும், ரஷியாவை ஜெயித்து விடவில்லை. 10 வாரங்களில் ரஷியாவைக் "குளோஸ்" பண்ணிவிடப் போவதாக ஹிட்லர் சொன்னார்; அவர் சொன்னதுபோல் நடக்கவில்லை. ரஷியாவுக்குப் "பிரம்மா" ஹிட்லர் என்பது அவர் எண்ணம் போலும்! ஆனால், அவர் ரஷியாவுக்குப் "பிரம்மா" அல்ல என்ற உண்மையைப் பிரம்மா ஹிட்லருக்கு எடுத்துக் காட்டிவிட்டார்! ரஷியாவுக்கோ அல்லது, இதர ஐரோப்பிய நாடுகளுக்கோ ஹிட்லர், பிரம்மாவுமல்ல; எமனும் அல்ல; ஹிட்லர் எமனுக்கும் பெரிய எமன் ஒருவன் இருக்கிறான். அந்த எமன் ஹிட்லர் முஸோலினி உயிரைக் கூடக் கொண்டு போகமுடியும்! இதை அறியாமல் ரஷியாவுக்கு எமனாக ஹிட்லர் நினைத்தார்! ரஷியர் எல்லோரையும் கொன்று, குவித்துப் பஸ்பமாக்கிவிட ஹிட்லர் நினைத்தார்; ஆனால், என்ன நடந்தது? யுத்தம் ஆரம்பித்த மூன்று மாத காலத்துக்குள், ரஷ்யப் போர்முனைகளில் ஹிட்லரே சுமார் 20 லக்ஷம் ஜெர்மன் துருப்புகளையும், எண்ணாயிரம் விமானங்களுக்கு அதிகமான விமானங்களையும், டாங்கிகளையும் இழந்தார். ரஷியர் கூறும் கணக்குப்படி பார்த்தால், சுமார் 30 லக்ஷம் துருப்புகளை அவர் ரஷியப் போர்முனைகளில் பலி கொடுத்திருக்கக்கூடுமென்று தெரிகிறது. ரஷியாவுக்கும், ஜெர்மனியைப் போன்றே பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். ரஷியாவை நசுக்கி, ரஷியரை எமனுக்குப் பலிகொடுக்க நினைத்த ஹிட்லரே, ஜெர்மனியரை லக்ஷக் கணக்கில் பலிகொடுக்க வேண்டியதாயிற்று! ஆகவே, ஹிட்லர் எமன் அல்ல; அவருக்கும் பெரிய எமன் ஒருவன் இருக்கிறான்! அந்த எமனுக்குமுன், ஹிட்லர் எம்மாத்திரம்!

ஃ ஃ ஃ

ரஷியாவை 10 வாரங்களில் நசுக்கிவிட நினைத்த ஹிட்லரால், 15 வாரங்களாகியும் ரஷியாவை நசுக்க முடியவில்லை. லெனின்கிராடை இரண்டு மாதங்களாக ஜெர்மனியர் தாக்கி வருகின்றனர். லெனின்கிராடை இன்னமும் கைப்பற்ற முடியவில்லை. லெனின்கிராட் நகரை ஜெர்மன் ராணுவங்கள் சூழ்ந்திருப்பது மெய்; லெனின்கிராட் நகரின் ஒரு பகுதியில் ஜெர்மன் ராணுவங்கள் இறங்கி இருப்பதும் மெய்யாக இருக்கலாம். என்றாலும், அந்நகரை ஜெர்மன் ராணுவங்களால் இன்னமும் கைப்பற்ற முடியவில்லை. இரு மாதங்களுக்குமுன் எந்த நிலைமையில் ஜெர்மன் ராணுவங்களிருந்தனவோ, அதே நிலைமையில்தான் இன்னமும் இருக்கின்றன. லெனின்கிராட் நகருக்கு வடக்கேயுள்ள லகோடா ஏரிக்கரைப் பிரதேசமெங்கும், பின்லந்து, ஜெர்மன் ராணுவங்கள் சூழ்ந்திருக்கின்றன. வடக்கே இருந்து லெனின்கிராடுக்கு உதவி கிடைதது வர மார்க்கமில்லை. தெற்கிலும், கிழக்கிலும் ஜெர்மன் ராணுவங்கள் சூழ்ந்திருக்கின்றன. என்றாலும், லெனின்கிராட் இன்னமும் வீழ்ச்சியடையவில்லை. அது வீழ்ச்சியடைந்தால் கூட அவ்வளவு சீக்கிரத்தில் வீழ்ச்சியடைந்துவிடாது என்பது மட்டும் நிச்சயம். லெனின்கிராடில் அவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கின்றன. லெனின் கிராடில் சுமார் 10 லக்ஷம் ரஷிய ராணுவங்களிருக்கின்றன. அதைச் சுற்றிலும் மலைக் குன்றுகள்; குன்றுகளையே கோட்டைகளாக அமைத்திருக்கிறார்கள் பால்டிக் கடலிலுள்ள ரஷியக் கடற்படை, விமானப் படைகளின் உதவி இன்னமும் கிடைத்து வருகிறது. இவ்வளவு தற்காப்புடனிருக்கும் லெனின்கிராடைச் சூழ்ந்திருக்கும் ஜெர்மன் ராணுவங்கள் சுமார் 4 லக்ஷம் இருக்கலாம். விமானப் படைகளும் ஓயாமல் அதைத் தாக்கிக்கொண்டே இருக்கின்றன. ஜெனரல் வொரோஷிலாவ் தலைமையில் லெனின்கிராடிலுள்ள ரஷியப் படைகள் தீவிரமாக ஜெர்மன் படைகளைத் தாக்கி வருகின்றன. லெனின்கிராட் நகரைச் சுற்றிலும் சுமார் 10, 15 மைல் தூரத்தில் யுத்த டாங்கிகளையும், ராணுவங்களையும் வீழ்த்த பூமிக்குள் சுரங்கங்களை அமைத்திருக்கிறார்கள். ஏராளமான டாங்கிகள் நாசமானதைக் கண்டு, ஜெர்மனியர் டாங்கிகளை உபயோகிக்கப் பயப்படுகிறார்கள். அங்கு மழையும், பனியும் ஆரம்பித்துவிட்டதால் ஏராளமான குதிரைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். லெனின்கிராடில் இன்று கடுமையான போராட்டம் நடந்து வருகிறது.

ஃ ஃ ஃ

மத்திய அரங்கத்தில் அதாவது, ஸ்மாலென்ஸ்க் போர் முனைகளில், ஜெர்மனியர் முன்னேறவில்லை. ரஷிய ஜெனரல் சிமோஷெங்கோ ராணுவங்களே ஜெர்மன் ராணுவங்களைத் தாக்கி வருகின்றன. ஜெர்மன் ராணுவங்கள் இங்கு தற்காப்பில் இருக்கின்றன. ஸ்மாலென்ஸ்க்குக்கு 40 மைல் தூரத்தில்ரஷிய ராணுவங்கள் வந்துவிட்டதாகத் தெரிகிறது. இங்குநாஜியர் முன்னேறவில்லை; அவர்களால் முன்னேறவும் முடியாது. மாஸ்கோ நகர்மீது படையெடுக்கும் எண்ணத்தை ஜெர்மனியர் கைவிட்டுவிட்டனர். அவர்கள் நோக்கம் தெற்கே இருப்பதால், தெற்கு நோக்கியே விரைந்து செல்லுகின்றனர். கோமல் நகரைக் கைப்பற்றிய ஜெர்மன் ராணுவங்கள், தென் கிழக்கு நோக்கிச் சென்று, கொர்னிஜாவ் என்ற இடத்தைக் கைப்பற்றின. அதற்கும் தென் கிழக்கே சென்று, கிரெமென்சக் நகரைக் கைப்பற்றிய மற்றும் சில ஜெர்மன் ராணுவங்கள் திடீரென கீவ் நகரை வளைத்துக் கொண்டன. கீவ் ஜெர்மனியர் வசமாயிற்று. இது யுக்ரெய்னின் தலைநகர். ரஷியாவின் முக்கிய நகரங்களில் மூன்றாவது நகரமென்று சொல்லலாம். கீவ் போனது ரஷியாவுக்குப் பெரும் நஷ்டமே. என்றாலும், இதனால் ரஷியா தோற்றுவிட்டதாகச் சொல்ல முடியாது. கீவ் நகர் வீழ்ச்சியடைந்தது பெரிய காரியமல்ல; அங்கு சுமார் 5 லக்ஷம் ரஷிய ராணுவங்களை வளைத்துக் கொண்டதாக ஜெர்மானியர்சொல்லுகிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மையென்பது தெரியவில்லை. 5 லக்ஷம் துருப்புக்களை வளைத்துக் கொண்டதோடு சுமார் 2 லக்ஷத்து 30 ஆயிரம் துருப்புகளைக் கொன்றுவிட்டதாகவும் சொல்லுகிறார்கள். ரஷியாவுக்கு இவ்வளவு பெரிய நஷ்டமென்றால், ஜெர்மனிக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்று சொல்லத் தேவை இல்லை. கீவ் நகரைக் கைப்பற்ற ஜெர்மனி பல லக்ஷக்கணக்கான துருப்புகளைப் பலி கொடுத்திருக்குமென்பது நிச்சயம். இந்தப் போர்முனைத் தளபதியான ஜெனரல் புடானி, ரஷியத் துருப்புகளை வளைத்துக் கொள்ளவிடாமல் பின்வாங்கிச் சென்றதாக ரஷியர் கூறுகிறார்கள். கீவில் வளைத்துக்கொள்ளப்பட்ட ரஷியத் துருப்புகளைப் பாதுகாக்க, ஜெனரல் புடானியின் துருப்புகளும், ரஷிய விமானப்படைகளும் இன்னமும் ஜெர்மன் ராணுவங்களை எதிர்த்தே வருகின்றன. கீவில் வளைத்துக் கொள்ளப்பட்ட ரஷியத் துருப்புகள் ஜெர்மன் துருப்புகளை எதிர்த்து வருகின்றன. ரஷியத் துருப்புகள் ஜெர்மன் அணிவகுப்பை உடைத்துக் கொண்டு வெளி வருமேயானால், ஜெர்மனிக்கு அது பெரிய தோல்வியாக

(14-ம் பக்கம் பார்க்க)

50 ஆண்டுகளாய் பிரசித்தி பெற்ற
மதனமஞ்சரி மாத்திரைகள்
தாது கோளாறு, மலச்சிக்கல் ஸ்வப்பனஸ்கலிதம், இவைகளுக்கு மேன்மையான குணத்தைக் கொடுக்கும். ரத்தமும், தாதுவும் அதிகப்பட்டு, திரேகத்திற்கு புது உற்சாகம் உண்டாக்கும். 1 டப்பி ரூ. 1.
ரமணி விலாசினி
ஒரு மணி நேரத்திற்கு முன் பாலுடன் சாப்பிடுவதால் கிழவரும்வாலிபர்களாக மாறுகிறார்கள். டப்பி ரூ.1
மதனமஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார், மதராஸ்.
T. D. மதுரநாயகம் அண்டு கோ,
211, செட்டியார் தெரு,
கொழும்பு.



சங்கநாதம்

ஒரு பெரிய அற்புதம்!

உரிமை "கயாதான்"!

கலியுகச் சித்தன்!

கர்மம் திரவில்லையே!

வெட்டி முறிப்பதென்ன?

மகாத்மா காந்தி. காந்திஜிக்கு 72-வயது பூர்த்தியாகி 73-வது வயது ஆரம்பம்; இந்த ஜயந்தியை இந்தியாவெங்கும் ஜனங்கள் ஆடம்பரமாகக் கொண்டாடுகின்றனர். காந்திஜி நீடுழி வாழ்க.

இந்தியாவெங்கும் சாத்வீகப் போராட்டம் நடந்து வரும் இச்சந்தர்ப்பத்தில், அந்தச் சாத்வீகப் போராட்டத்தின் கர்த்தாவான அஹிம்சா மூர்த்தி, காந்திஜியின் 73வது ஜயந்தியைக் கொண்டாடுவது ஒரு விசேஷமாகும். இவ்வித சந்தர்ப்பம் இவ்வருடந்தான் கிடைத்திருக்கிறது. ஆகவே, இந்தியாவெங்கும் காந்தி ஜயந்தியை விசேஷ விதமாகக் கொண்டாடிவருகின்றனர் ஒவ்வொரு கிராமத்திலும், நகரிலும், ஜில்லாவிலும், மாகாணத்திலும் இந்த ஜயந்திக் கொண்டாட்டத்துக்கு விசேஷ திட்டம் போட்டு வேலை செய்து வருகிறார்கள். அக்டோபர் மாதம் 2ந்தேதி காந்திஜி பிறந்த நாள். அதற்கு முந்தின ஒரு வாரத்தைக் கதர் வாரமாகவும், பிந்தின வாரத்தை காந்திஜியின் ஜயந்தி வாரமாகவும் பல இடங்களில் கொண்டாடி வருகின்றனர். இந்த ஜெயந்தியின்போது, காந்திஜிக்குப் பிரியமான கதர், தீண்டாமை, மதுவிலக்கு, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை முதலிய காங்கிரஸ் நிர்மாண திட்டங்களில் விசேஷ கவனஞ் செலுத்தும்படி காங்கிரஸ் தலைவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதன்படி ஒவ்வொரு இடத்திலும், காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தில் விசேஷ கவனஞ் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. காந்திஜிக்கு அதை விடத் திருப்தியளிக்கக் கூடியது வேறு ஒன்றுமில்லை.

ஃ ஃ ஃ

ஜபல்பூரில் பெரிய ஊர்வலத்துடன் காந்தி ஜயந்தி விழாவை ஆரம்பித்து வைத்தனர். அங்கு நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் காந்திஜிக்கு 7,300 ரூபாய் பண முடிப்பு ஒன்றும், கதர் நூலும் காணிக்கையாக அனுப்பிவைத்தனர். ராஜ்கோட்டில் 46,901 ரூபாய் பண முடிப்புக் கொடுத்தனர். ஸிந்து மாகாணத்திலும், வங்காளம், பீகார், மத்திய மாகாணம் முதலிய இடங்களில் பெரிய திட்டம் போட்டு ஜயந்தியைக் கொண்டாடி வருகின்றனர் கதர் காட்சி, ராட்டினத்தில் நூற்றல், இதுபோன்றவைகளை நடத்தி வருகின்றனர். சென்னை மாகாணத்திலும் பற்பல இடங்களில் காந்தி ஜயந்தியை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். பல காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலிருந்து விடுதலையடைந்திருப்பதால், எல்லோரும் இந்த விழாவில் கலந்துகொள்ள நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆச்சாரியா கிருபாலினி பம்பாய், புனா, ஆமதாபாத் முதலிய இடங்களுக்குச் சென்று, காந்திஜியின் தத்துவங்களையும், அவருடைய சத்தியாக்கிரக இயக்கத்தின் பெருமையையும் பற்றிப் பேசி வருகிறார். தார்வார் என்ற இடத்தில் அவர் பேசியபோது, காந்திஜி ஒரு பெரிய புரட்சிக்காரர் என்றார். ஆம்; காந்திஜி பெரிய புரட்சிக்காரர்தான்; உலகில் தோன்றிய பெரிய புரட்சிக்காரரில் அவர் ஒருவர். ஆனால் காந்திஜி ஒரு சாத்வீகப் புரட்சிக்காரர்; பலாத்கார புரட்சிகாரர் அல்ல. ஒரு சொட்டு இரத்தஞ் சிந்தாமல், 40 கோடி மக்கள் கொண்ட இந்தியாவில் ஒரு பெரிய புரட்சியை, சாத்வீகப் புரட்சியை உண்டுபண்ணி இருக்கிறார்; இது பெரிய அற்புதமல்லவா?

ஃ ஃ ஃ

ஐரோப்பாவில் பெரிய பயங்கர யுத்தம் நடந்துவருகிறது; அதே சமயத்தில் இந்தியாவில் ஒரு சாத்வீகப் போராட்டம் நடந்து வருகிறது. காந்திஜி, ஏன் இந்தப் போராட்டத்தை, இந்தச் சமயத்தில் ஆரம்பித்தார்? நமது சாதாரண உரிமைகளைக் காப்பாற்றவே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார். காந்திஜி இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்காவிட்டால், நமக்கு இருந்துவரும் அற்ப சொற்ப உரிமைகள்கூடக் 'கயா'வாகி இருக்கும்! இந்தியர் சுதந்திரத்துக்காகப் போராடிவரும் காங்கிரஸை நசுக்கியிருப்பார்கள்! காங்கிரசுக்குப் புத்துயிர் அளிக்கவும், இந்தியர் உரிமைகளைக் காப்பாற்றவுமே, காந்திஜி இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார். இது உலகத்திலேயே கேள்விப்பட்டிராத ஒரு புது மாதிரியான போராட்டம்; அரசியல் போராட்டம் மட்டுமல்ல; ஒரு பொருளாதார போராட்டம்; சமூக மனப்பான்மையிலும், ஒவ்வொரு வீட்டு வாழ்க்கையிலும் ஆச்சரியப்படக் கூடிய விதமான மாறுதல்களை உண்டுபண்ணக்கூடிய போராட்டம்! இன்று, ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு குடும்ப வாழ்க்கையிலும் காந்திஜி எத்தகைய புரட்சியை உண்டுபண்ணியிருக்கிறார்; இன்னம் நூறு வருடங்கள் கழிந்தாலும் சமூக மனப்பான்மையில் இவ்வித மாற்றங்களை உண்டுபண்ண முடியாது. பலாத்காரத்தாலும், ஆயுத பலத்தாலும் 100 வருடங்களில் சாதிக்க முடியாத அவ்வளவு பெரிய காரியங்களை, காந்திஜி 10 வருடங்களில் சாதித்து, இந்தியாவுக்கு ஒரு பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறார்! அதனால்தான், காந்திஜியை ஒரு பெரிய புரட்சிக்காரர் என்று கிருபாலினி சொல்லுகிறார். காந்திஜி ஒரு சித்தன்; கலியுக சித்தன்!

ஃ ஃ ஃ

திருச்சி சிறையிலிருந்து சமீபத்தில் விடுதலையடைந்த மாஜி மந்திரி, டாக்டர் ராஜனும், காந்திஜியின் புரட்சி மனப்பான்மையைப் போற்றியிருக்கிறார். காந்திஜி ஆரம்பித்திருக்கும் சாத்வீகப் போராட்டம், உலகிலேயே இணையற்றது; எந்தத் தேச சரித்திரத்திலும், இதற்கு இணையான போராட்டம் நடந்ததுமில்லை; இனிமேல் நடக்கப்போவதுமில்லை! அஹிம்சாக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு போராட்டத்தை, புரட்சியை ஆரம்பித்து, தேசத்தின் கௌரவத்தையும், மானத்தையும் காப்பாற்றும்படி செய்திருக்கிறார். காந்திஜி இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்காவிட்டால், தேசத்தின் மானமே போயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

காந்திஜி ஆரம்பித்திருக்கும் போராட்டம் திருப்திகரமாக நடந்து வருகிறது. சர்க்காருக்கு எந்தவிதமான சங்கடமும் இதனால் ஏற்படவில்லை; எவ்வித சங்கடத்தை உண்டுபண்ணவும் கூடாது. இதனால்தான் காந்திஜி இப்போராட்டத்தில் அதிகத் திருப்தியடைந்திருக்கிறார். இவ்வித ஆத்மீக போராட்டத்தின் பலாபலன்களை, வெற்றி, தோல்வியைக் கொண்டு பார்க்கக் கூடாது; இப் போராட்டத்தால் ஏற்படக் கூடிய மாற்றங்களைப் பொறுத்துத்தான் பார்க்கவேண்டும். உடனடியாக இப் போராட்டத்தின் பலனை எதிர்பார்க்கக் கூடாது. இப்போராட்டத்துக்கு அடிப்படையாக இருந்து நடத்தும் தலைவருக்கும் தடையாக இருக்கக் கூடாது; தடையாக இருக்கக்கூடிய எந்தக் காரியத்தைச் செய்யவும் கூடாது. காங்கிரஸ் தலைவர்கள் பலர் சிறையிலிருக்கிறார்கள்; அவர்கள் இப்பொழுதுதான் ஒவ்வொருவராக விடுதலையடைந்து வருகின்றனர். திருச்சி சிறையிலிருக்கும் ராஜகோபாலாச்சாரியார், அக்டோபர் மாதம் 16ந் தேதி விடுதலையடைகிறார்; அவருடனிருக்கும் மாஜி மந்திரி, டி. பிரகாசம் அக்டோபர் மாதம் 6ந் தேதி விடுதலையடைகிறார். காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களும் அடுத்த மாத முடிவுக்குள் விடுதலையடைகின்றனர்.

ஃ ஃ ஃ

தீவிர மாறுதலை வேண்டுவோரும், சிறை செல்ல விரும்பாதவர்களும், காங்கிரஸ் நிர்மாண வேலைகளில் நாட்டமில்லாதவர்களும் திடீரென ஒரு காரியத்தில் இறங்கக் கூடாது. காங்கிரஸ் தலைவர்கள் விடுதலையடையும் வரையில் காத்திருப்பது நலம். காங்கிரஸ் தலைவர்கள் சும்மா கை கட்டிக்கொண்டிருக்கப் போவதில்லை. தேசத்தின் நிலைமையைக் கவனித்து, அவர்கள் ஒரு சரியான முடிவுக்கு வருவார்களென்பதில் சந்தேகமில்லை. அதுவரையில் காங்கிரஸ்காரர் அனைவரும் பொறு

(அடுத்த பக்கம் பார்க்க)

சூளை கண் ஆஸ்பத்திரி (கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்)

டாக்டர் எடுக்கச் சொல்கிற கண் எடுக்காமல் குணமாகும்.

கண் ஆச்சரிய பார்வை வரும் ஆப்ரேஷனில்லாமலே பூ, புரை, மேகநீர், உள்பூ, புரை கவர்ந்து அடியில் கண்ட பார்வை வரும்.

கால் குருடு $1\frac{1}{2}$ அடியில் படிக்கும் கண் $2\frac{1}{2}$ அடிக்குள் கண்ணாடியில்லாமல் படிக்க மருந்து விலை ரூ 10-8-0 அரை குருடு 1-அடி 2-அடியில் படிக்க மருந்து விலை ரூ. 21-0-0 முக்கால் குருடு $\frac{1}{4}$ $\frac{1}{2}$ அடி அதை 2 அடிவரை படிக்க மருந்து விலை ரூ. 31-8-0 நேரில் சிகிச்சை செய்ய ரூ. 60-0-0 குணமில்லையானால் பணம் வாபீஸ்; உத்திரவாத சீட்டுக்கு ரூ. 100-0-0. (முழுக்குருடு எழுத்து படிக்க முடியாத கண் ஆப்ரேஷனால் மறைந்த கண், டாக்டர் மேக நீர் கண் முடியாது என்று கைவிட்டது நேரில் பார்த்து குணமாக்குவோம்.)

No. 8. M. சூளை ஐரோடு, சென்னை.

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாய மந்திரக் கோல்!

யானை அசைந்து தின்னும்!

வைசிராய்க்கு பஞ்சம்!

ஜாடிக் கேற்ற மூடி!

அமெரியை கட்டியழுவானேன்?

மையுடன் காத்திருப்பதே நல்லது. இந்தியரின் அரசியல் பிரச்னை ஒரு விஷயமல்ல; 40 கோடி மக்களின் விடுதலைப் பிரச்னை, சாதாரண விளையாட்டுக் காரியமல்ல; இந்த விடுதலை விஷயத்தை அற்பமாக நினைத்துவிடக்கூடாது. நினைத்த மாத்திரத்தில் வெற்றி கிடைத்துவிடுமென்று நினைப்பதும் தவறு. வெற்றி படிப்படியாகத்தான் கிடைக்கும்; அந்த வெற்றி வழியே இந்தியர் செல்லவேண்டும்; அதற்கு வழிகாட்டியாக காந்திஜி இருக்கிறார். அவரைப் பின்பற்றிச் செல்லவேண்டியது இந்திய மக்களின் கடமை. காந்திஜியை உண்மையாகப் பின்பற்றிச் சென்றால், இந்தியருக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம்.

ஃ ஃ ஃ

பூனா ஆஸ்பத்திரியில் நோய்ப்பட்டிருந்த புலாபாய் தேசாய், அவருடைய குமாரனுடன் பம்பாய் வந்து சேர்ந்தார். அவரை ஸ்டேஷனில் பல காங்கிரஸ்காரர் வரவேற்று மாலைகள் சூட்டினர். கே. எம். முன்ஷி போன்றவர்களும் அவரை ஸ்டேஷனில் வரவேற்கச் சென்றார்கள். புலாபாய் தேசாய், இன்னம் 6 வாரங்களுக்குப் படுத்த படுக்கையிலேயே இருக்கவேண்டுமென்றும், 2 மாதங்களுக்கு அவர் மலைவாசம் செய்ய வேண்டுமென்றும் டாக்டர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். சர்தார் பட்டேல் நல்ல குணமடைந்து வருகிறார். ஸிந்து மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் சோய்த்ராம் கித்வானி சிறையிலிருந்து விடுதலையடைந்துவிட்டார்.

ஃ ஃ ஃ

பர்மா-இந்தியர் சம்பந்தமாக இந்திய சர்க்கார், சர். வாஜ்பேயர் மூலம் செய்து கொண்ட ஒப்பந்தம், இந்தியாவுக்கு ஒரு பெரிய விலங்கு! குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட கதைபோல், சர். வாஜ்பேயர் தலைமையில், பர்மா-இந்தியர் சம்பந்தமாக, பர்மா சர்க்காருடன் ஒரு ஒப்பந்தஞ் செய்து கொள்ளச் சென்றனர்; பர்மா இந்தியர் உரிமைகளையே அடியோடு பர்மியருக்கு அர்ப்பணஞ் செய்து விட்டு வந்திருக்கிறார்! காசிக்குப் போயும் கர்மந் தீரவில்லையென்று சொல்லுவார்கள் சர் வாஜ் பேயர், பர்மாவுக்குச் சென்று, பர்மிய இந்தியர்நிலைமையை நேரில் கண்டும், பர்மா இந்தியரை பர்மா சர்க்காரின் தயவில் வாழக்கூடிய அனாதைகளின் நிலைமையில் வைத்துவிட்டார்! இது சம்பந்தமாக நாடெங்கும் கிளர்ச்சி நடந்து வருகிறது. இந்திய சட்டசபையில்கூட இது சம்பந்தமாக தீர்மானம் வரப்போகிறது. பர்மா, இந்தியத் தூதுக்கோஷ்டியினர் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து, வைசிராயைக் கண்டு பேசினர்; பர்மா, இந்தியருக்கு இருந்துவரும் குறைகளை எடுத்துக் கூறினர். ஜின்னா சாஹேப், சர்தார் பட்டேல், புலாபாய் தேசாய் முதலியோரையும் கண்டு பேசினார்கள். பர்மா இந்தியர் சம்பந்தமான தீர்மானம் இந்திய சட்டசபையில் விவாதத்துக்கு வரும்போது, காங்கிரஸ்காரர் இந்திய சட்டசபைக்குச் சென்று, இந்த தீர்மானத்தை ஆதரிக்க அனுமதிக்கும்படி, சர்தார் பட்டேலைப் பர்மா-இந்தியத் தூதுக் கோஷ்டியினர் கேட்டுக்கொண்டனர். பட்டேல் அதற்கு இணங்கவில்லை; காங்கிரஸ்காரர் இந்திய சட்டசபைக்குப் போவதும், போகாததும் ஒன்றுதான்; அவர்கள் சட்டசபைக்குப் போய், வெட்டி முறித்து விடப்போவது ஒன்றுமில்லை! தீர்மானம் நிறைவேறினாலும், வைசிராய் ஒரே அடியாக அவருடைய மாய மந்திரக் கோலால், அந்தத் தீர்மானத்தைத் தவிடு பொடியாக்கி விட முடியும்!

ஃ ஃ ஃ

பர்மா, இந்தியத் தூதுக்கோஷ்டியினர், காந்திஜியையும் கண்டு பேசினர். காந்திஜி, பர்மா இந்தியர் ஒப்பந்தத்தை ஏற்கனவே பலமாகக் கண்டித்திருக்கிறார்; காந்திஜி மட்டும், இன்று ஒரு பெரிய போராட்டத்தில் ஈடுபடாமலிருந்தால், அவரே பர்மா-இந்தியர் போராட்டத்தை நடத்தி, அந்த ஒப்பந்தத்தைச் சுக்கல் நூறாகக் கிழித்து எறிந்து, வெற்றி பெற்றிருப்பார்! ஆனால், காந்திஜி இன்று அவ்வித நிலைமையில் இல்லை; எனினும், அஞ்சாத நெஞ்சத்துடன், இந்தக் கிளர்ச்சியை நடத்தும்படி தூதுக் கோஷ்டியினருக்கு யோசனை சொன்னார். கேவலமான வாழ்க்கையைவிட, சுதந்திரமான சாவே மேல் என்றும் அவர்களுக்குப் புத்தி சொன்னார். பர்மா-இந்தியர் ஒப்பந்தத்தைப் பற்றிக் கிளர்ச்சி அதிகமாக இருப்பதால் சர்க்கார்கூட வெருண்டு போயினர். இந்த ஒப்பந்தத்தைப்பற்றி இவ்வளவு பெரிய கிளர்ச்சி ஏற்படுமென்று சர்க்கார் நினைக்கவே இல்லை அவர்கள் ஏதோ அலட்சியமாக இருந்தார்கள். இந்த எதிர்ப்பு அதிகமாகவே, வைசிராய் நிர்வாகக் கவுன்சிலில் இடம்பெற்ற சர். பெரோஸ்கான் நூனை, அமெரிக்காவுக்கு இந்திய ஏஜண்டாக அனுப்பி வைத்துவிட்டு, சர். வாஜ்பேயரை வெளிநாட்டு இந்தியர் இலாக்காவுக்குத் தள்ளி விடலாமா என்று இந்திய சர்க்கார் யோசனை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்திய சட்டசபையில் இது சம்பந்தமாகக் கேள்விகள் வந்தால், பதில் சொல்லுவது யார்? சர். பெரோஸ்கான் நூன் இந்த ஒப்பந்த சம்பந்தமாக எதுவும் அறியார்; சர். வாஜ் பேயரே இந்த ஒப்பந்த கர்த்தா; அவர் அறியாமையால்தான் ஒப்பந்தம் இந்தக் கதியடைந்தது! அதற்குப் பதில் சொல்ல வேண்டியதும் அவரே!

ஃ ஃ ஃ

பர்மா-இந்தியர் ஒப்பந்த விதிகள் அக்டோபர் மாதம் முதல் தேதியில் அமுலுக்கு வருவதாக இருந்தது; ஆனால், அதற்கு இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பைக் கண்டு, பர்மா சர்க்காரே திணறிப் போயினர். அந்த ஒப்பந்தம் குறிப்பிட்ட காலத்தில் அமுலுக்கு வராதென்று பர்மா சர்க்காரே அறிவித்திருக்கிறார்கள். பர்மா சர்க்கார், அவர்கள் நிலைமையை இப்பொழுதாவது உணர்ந்ததைப்பற்றி சந்தோஷந்தான்.

ஃ ஃ ஃ

வைசிராய் நிர்வாகக் கவுன்சில் பதவியை ஏற்றுக் கொண்ட எம். எஸ். ஆனே, இந்திய சட்டசபையில் சர்க்கார் கட்சித் தலைவராக இருப்பார். அதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன. ராஜங்க சபையில் சர்க்கார் கட்சித் தலைவராக சர். அக்பர் ஹைதரி நியமிக்கப்பட்டிருக்கிறார். எம். எஸ். ஆனே பதவி ஏற்குமுன் காந்திஜியைக் கண்டு பேசச் சென்றிருக்கிறார்; வெளிநாட்டு இந்தியர் நிலைமை, தற்கால அரசியல் முட்டுக்கட்டை முதலிய சகல விஷயங்களையும் பற்றிக் காந்திஜியைக் கலந்து ஆலோசித்து வருகிறார். ஒரிஸாவில் சில காங்கிரஸ் அடங்காப்பிடாரிகள், காங்கிரசுக்கே துரோகஞ் செய்ய முனைந்திருக்கின்றனர். இதர கட்சியினருடன் சேர்ந்து மந்திரி சபை அமைக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். ஆனால், அவர்கள் முயற்சி வெற்றி பெறுமென்று சொல்லமுடியாது. ஒரிஸா காங்கிரஸ் தலைவர்கள் இந்தத் துரோகிகளின் சதியை முறியடிக்க வேலை செய்து வருகின்றனர். காங்கிரஸ் எதிர் கட்சியினருக்குள்ளாகவே நம்பிக்கை இல்லை; பதவிகளுக்கு ஒருவருடன் மற்றொருவர் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பதவி மோகம் எப்பொழுது தலைக்கேறியதோ, சந்தேகம் ஏற்படுவதும் உறுதி! சந்தேகமும், நம்பிக்கையின்மையும் இருக்கிற வரையில், மந்திரி சபை ஏற்படப் போவதில்லை; அப்படியே ஏற்பட்டாலும், அது உருப்படாது என்பது நிச்சயம்.

ஃ ஃ ஃ

அக்காலத்தில் மன்னர்கள் ஒரு பணக்காரனைப் பழி வாங்க எண்ணினால், அவன் வீட்டிற்கு யானை ஒன்றை அனுப்பி, அதைப் போஷிக்கும்படி உத்திரவு போட்டு விடுவார்கள்! வீடு அசையாமல் தின்னும், யானை அசைந்து தின்னும் என்பது பழமொழி! யானைக்கு ஒரு பணக்காரன் எவ்வளவு காலத்துக்குத்தான் தீனி போட முடியும்? பணக்காரன் பணம் போய், அவன் பிச்சையெடுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துவிடுவான்! இதுதான் ஆதிகால மன்னர்கள் பணக்காரரைப் பழிவாங்கும் தந்திரம்! இதேபோல், இந்தியரைப் பழிவாங்க நினைத்தால், பிரிட்டிஷார் என்ன செய்வார்கள் தெரியுமா? மகா தந்திர சாலிகளான வைசிராய்களையும், கவர்னர்களையும் இந்தியாவுக்கு அனுப்பி விடுவார்கள்! அந்த வைசிராய், கவர்னர்கள் இந்தியாவிலிருந்துகொண்டே, இந்தியர் உப்பைத் தின்று, இந்தியர் உரிமைக்கே உலைவைத்து விடுவார்கள்! இவர்களின் ஆட்சி காலம் 5 வரு

(அடுத்த பக்கம் பார்க்க)

சுத்தமான உயர்ந்த மிட்டாய்
தினுசுகளையே வாங்குங்கள்.

சீயாழி கன்பேக்ஷனரி லிமிடெட் கம்பேனியார்

தயாரித்த நன்கு பக்குவமான மிட்டாய்கள், காரமல்ஸ், லாஸஞ்சஸ் முதலியவைகளே உங்கள் மனதுக்கிசைந்தவை.

முதன் முதலில் உயர்ந்த மிட்டாய்களைத் தயாரித்த சீயாழி கன்பேக்ஷனரிப் பாக்டரியை, இப்பொழுது சென்னைக்கு மாற்றியிருக்கிறார்கள்.

விவரங்களுக்கு கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

எல். எப். போகர் அண்டு கம்பேனி, லிமிடெட்.,
(லெஸ்ஸிஸ்) சீயாழி கன்பேக்ஷனரி லிமிடெட்.,
நெ. 30. செகண்ட் லைன் பீச், மதராஸ்.

தொழிற்சாலை:—நெ. 19, கும்பாளம்மன் கோவில் தெரு,
தண்டையார் பேட்டை, மதராஸ்.

சங்கநாதம்

முன் பக்கத் தொடர்ச்சி

நாக்கில் நரம்பில்லையா? — — காளை குட்டி போடவில்லை!
கோழி முட்டைதான்! குருட்டுப் போக்கு!

டமே என்றாலும், சர்க்கார் வஞ்சகம் தீர்க்க நினைத்தால், வைசிராய், கவர்னர்களின் காலத்தை அதிகப்படுத்தி விடுவது வழக்கம். இதுவரையில் இந்தியாவுக்கு வந்த வைசிராய்களில் 6 வருடங்களுக்கு அதிகமாக இருந்த வைசிராய்கள் வெகு சொற்பம். இருவரே 7 வருஷங்களுக்கு இந்தியாவில் வைசிராயாக இருந்திருக்கிறார்கள். ஈஸ்ட் இந்தியா கம்பெனி காலத்தில், அதாவது, சுமார் 100 வருடங்களுக்குமுன், 1848ம் வருடத்திலிருந்து, 1856ம் வருடப் வரையில் லார்ட் டெல்ஹௌஸி வைசிராயாக இருந்தார். அதற்குப்பின் அந்த அதிர்ஷ்டம் லார்டு லின்லித்கோவுங்கு அடித்திருக்கிறது! லார்டு லின்லித்கோவின் ஆட்சி காலத்தை இன்னும் ஒரு வருடத்துக்கு அதிகரித்திருக்கிறார்கள்! எதற்காக வைசிராயின் ஆட்சி காலத்தை ஒரு வருடத்துக்கு அதிகரித்திருக்கிறார்களோ தெரியவில்லை பிரிட்டனில் சரியான ஒரு வைசிராய்க்குப் பஞ்சமா; அல்லது, இந்த யுத்த காலத்தில், ஒரு வைசிராயைத் தேடிப் பிடிக்கச் சர்ச்சிலுக்கு அவகாசமில்லையா? அவகாசம் இல்லாமலில்லை; ஜாடிக்கேற்ற மூடி வேண்டுமல்லவா? சர்ச்சிலுக்கு ஏற்ற இந்தியா மந்திரியும், வைசிராயும் இருந்தால்தானே, அவர் காரியங்களைச் சாதிக்க முடியும்! அதற்கு ஏற்ற இருவர் அகப்பட்டிருக்கிறார்கள். அமெரி இந்திய மந்திரியாக இருக்கிறார்; லார்டு லின்லித்கோ வைசிராயாக இருக்கிறார். இந்த இருவரும் போகவேண்டும்; அவர்களுக்குப் பதிலாக வேறு புதிய இருவர் வர வேண்டும்; புதியவர்கள் இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைத்து, இந்தியாவுடன் சமரசஞ் செய்துகொள்ள வேலை செய்ய வேண்டுமென "மான்செஸ்டர் கார்டியன்" என்ற பத்திரிகை எழுதியிருக்கிறது. இது வேடிக்கைதான்! "மான்செஸ்டர் கார்டியன்" பிரிட்டிஷாரின் ராஜதந்திரத்தை இன்னமும் அறியாமலிருப்பது ஆச்சரியமே!

ஃ ஃ ஃ

இந்திய மந்திரி அமெரிக்குச் சீட்டுக் கொடுத்து விட்டு, வேறு ஒருவரை நியமிக்கச் சர்ச்சிலுக்கு முடியாதா? முடியும். ஆனால், சர்ச்சில் ஏன் இன்னமும் அமெரியைக் கட்டியழுகிறார்? சர்ச்சிலுக்கு ஏற்ற பிற்போக்காளர் அமெரி! அப்பேர்ப்பட்ட அமெரியை, சர்ச்சில் எப்படிப் போகச் சொல்லுவார்? இந்திய மந்திரி பதவி ஏற்பதற்குச் சில தினங்களுக்குமுன், இந்தியா சுயராஜ்யத்துக்குத் தகுதியடைந்துவிட்டது; இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்க வேண்டியதுதான் என்ற அமெரி பேசினார்! அமெரி இந்திய மந்திரியாக வந்ததும், இந்தியரின் தகுதி மாறிவிட்டது! இந்தியா சுதந்திரத்திற்கு லாயக்கில்லாமல் போய்விட்டது! அமெரி இவ்வாறு நாக்கில் நரம்பில்லாமல் இன்னும் அப்படியே சொல்லிவருகிறார்!

ஃ ஃ ஃ

அமெரிக்கு அண்ணத்தை இந்திய வைசிராய் லின்லித்கோ பிரபு! ஆறு வருட காலமாக இந்தியாவில் இருந்தும், இந்தியரின் நிலைமையை வைசிராய் தெரிந்துகொள்ளவில்லை இன்னமும் பழைய தர்பார் காலத்தில் தானிருக்கிறார்! சர்ச்சில் இந்திய அரசியல் பிரச்னை சம்பந்தமாக என்ன கருத்துக் கொண்டிருக்கிறாரோ, அதன் அறிகுறியாக வைசிராய் இந்தியாவில் இருக்கிறார்! அதாவது, இந்தியாவுக்கு எவ்வித சுதந்திரம் கொடுக்கவும் பிரிட்டிஷார் தயாராக இல்லை! இந்தியர் கோரிக்கைக்கு இணங்கிவர வேண்டுமென்ற எண்ணம் சர்ச்சிலுக்குக் கொஞ்சமும் கிடையாது. அவர் ஆதியில் என்ன சொன்னாரோ, அதை நிலை நாட்டவே, வைசிராய் லின்லித்கோ பிரபுவை இந்தியாவில் இன்னம் ஒரு வருடம் வைசிராயாக வைத்திருக்கத் தீர்மானித்திருக்கிறார்!

ஃ ஃ ஃ

லார்ட். லின்லித்கோ வைசிராயாக வந்தபோது என்னென்னமோ சொன்னார்கள்; அவரை வானமளாவப் புகழ்ந்தனர்! அவர் விவசாய நிபுணர்; விவசாயத்தை அபிவிருத்தி செய்வதில் ரொம்பக் கருத்துடையவர்; காளை மாடுகளிடம் அதிகப் பற்றுதலுடையவர் என்ற பாராட்டினர்! வைசிராய் இந்தியாவுக்கு வந்து 6 வருடங்களாகின்றன. இந்த ஆறு வருட காலத்தில், இந்தியா அடைந்த அபிவிருத்தி என்ன? அரசியல் ஒரு பக்கம் இருக்கட்டும்; விவசாயம் கைத்தொழில் முதலியவைகளில் இந்தியா என்ன நிலைமையிலிருக்கிறது? பழைய குருடிதான்! வைசிராய் பிரபுவின் விசேஷ அக்கரையால் இந்தியாவில் விவசாயம் அபிவிருத்தியடைந்து விடவில்லை; மாதம் மும்மாரி பொழிந்து, இந்தியாவில் விவசாயம் விளைந்து கொட்டி விடவில்லை! இந்திய காளைகள் குட்டி போட்டுவிடவுமில்லை! அரசியலோ, இன்னமும் பூஜ்யம்; கோழிமுட்டைதான்!

ஃ ஃ ஃ

இந்த யுத்த சமயத்தில், வைசிராய்க்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. வைசிராய் மட்டும் நிதான புத்தியுடனும், தைரியமாகவும், நல்லெண்ணத்துடனும் வேலை செய்திருந்தால், இந்தியாவில் எவ்வளவோ பெரிய காரியங்களைச் சாதித்திருக்கலாம். இந்தியர் கோரிக்கையை நிறைவேற்றி வைத்துப், பெரும் புகழும் பெற்றிருக்கலாம். பிரிட்டனுக்கும், இந்த யுத்த சமயத்தில் எவ்வளவோ உதவியையும், ஒத்துழைப்பையும் தேடிக் கொடுத்திருக்கலாம். ஆனால், வைசிராய் அதில் தவறிவிட்டார். புத்தியைக் கடன் கொடுத்துவிட்டார். இன்று இந்தியா இந்த நிலைமையிலிருப்பதற்கு வைசிராய்தான் காரணம். இந்தியாவில் இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிக்கும், முட்டுக்கட்டைக்கும் அவரே காரணம். இன்று இந்தியாவில் யுத்த முயற்சிக்கு இடையூறு ஏற்படுமேயானால், அதற்கும் அவரே காரணம்! இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு தாராளமான உதவி போகாமலிருக்குமேயானால், அதற்கும் வைசிராய் பிரபுவே காரணமென்று நிச்சயமாகச் சொல்லலாம்! மொத்தத்தில், வைசிராய் விசால புத்தியுடன் நடந்துகொள்ளவில்லை; பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்குள்ள குறுகிய புத்தியுடனும், குருட்டுப் போக்குடனும் நடந்துகொண்டார்; அதன் பயனாக இந்த நெருக்கடி!

ஃ ஃ ஃ

காங்கிரசுக்கும், சர்க்காருக்கும் யுத்தத்துக்குமுன் ஒரு சமரசம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. வைசிராய் அந்தச் சந்தர்ப்பத்தைத் தட்டிக் கழித்தார். லீகைத் தட்டிக் கொடுத்து, காங்கிரசைக் கவிழ்க்க எண்ணினார். அத்துடன் நின்றாரா? இல்லை; மைனாரிட்டிகளையும், சமஸ்தான மன்னர்களையும் தூண்டிவிட்டார்! அதன் பயனாக இந்தியாவில் பிற்போக்காளர் தலை தூக்கினார்கள். அவர்கள் இந்திய சுதந்திரத்துக்கு இடையூறாக நின்றனர். வைசிராய் வெற்றி பெற்றுவிட்டதாக அகமகிழ்ந்தார். ஆனால், எந்த வகுப்புவாதப் பேயை வைசிராய் சிருஷ்டித்தாரோ, அதே வகுப்புவாதப் பேய் இன்று வைசிராயின் எதிரே நிற்கிறது; எந்த லீகை அவர் தட்டிக் கொடுத்து ஆதரவு பெற நினைத்தாரோ, அதே லீக் இன்று அவருக்குத் தடையாக வந்துவிட்டது! வைசிராய் நிர்வாகக் கவுன்சிலையும், யுத்தப் பாதுகாப்புக் கவுன்சிலையும் உருப்படாமற் செய்ய லீகரே இன்று வேலை செய்கிறார்கள்! லீகரே இன்று அந்தக் கவுன்சிலிலிருந்து ராஜிநாமா செய்து வருகின்றனர்! லீகுக்கும், காங்கிரசுக்கும் சமரசம் ஏற்படாமல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க முடியாது என்ற பழைய பல்லவியையே வைசிராய் பாடிக்கொண்டிருக்கிறார்! அதன்பயனாக, இந்திய நெருக்கடியை அதிகரித்துவிட்டார்! அந்த நெருக்கடி இன்று சுலபத்தில் தீருவதாக இல்லை. இந்தியாவில் இன்று ஏற்பட்டிருக்கும் குழப்பமான நிலைமைக்கு வைசிராய்தான் காரணம். இந்தத் தொல்லையைப் போக்குவதற்குச் சரியான வழியைக் கண்டுபிடிக்க முடியாமல் வைசிராயே திண்டாடிக்கொண்டிருக்கிறார்! அவர் செய்த வினை, அவரையே சூழ்ந்திருக்கிறது! இந்த நிலைமையில் வைசிராயின் ஆட்சி காலத்தை ஒரு வருடத்துக்கு அதிகரித்து விடுவதால் நெருக்கடி தீர்ந்து விடுமா? தீரப் போவதில்லை. நெருக்கடி தீர ஒரே வழி, இந்தியரின் கோரிக்கைக்கு இணங்கி வருவதைத் தவிர வேறு வழியில்லை.

சொற்பப் பிரதிகளே
கைவசமிருக்கின்றன!

சொக்கநாதன்
அல்லது
ரங்கன் திருவிளையாடல்

விலை அணு 12.
தபால் செலவு வேறு.
"தமிழ் மணி" மதராஸ்.

இருமலை இன்றே ஒழி!
எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படுவது
துரும்பிலேயே கிள்ளி எறிந்தால் இந்தத் துன்பமேன்!
ஆனாலும் பரவாயில்லை

சி. எம். சாமி **தாளகபஸ்பம்**

இருமல், இளைப்பு, இழுப்பு, ஈளை, கபம், காசம், குரலடைப்பு, தொண்டைக்கம்மல், தொண்டை வலி, மார் துடிப்பு, க்ஷயம் முதலிய கொடிய வியாதிகளையும் குணப்படுத்துகிறது. மார்பிலும் தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலை நாளாவட்டத்தில் தணியச் செய்து, கபத்தை அறவே ஒழித்து சளியோடு ரத்தம் வருதல் மஞ்சள் நிறமாக வருதல், கோழை கட்டி கட்டியாய் விழுதல், நடந்தால் இளைப்புக் காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்துகிறது.

புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0   தபால் சார்ஜ் வேறு.

தலைமை ஆபீஸ்:—
மலையப்பசாமி வைத்தியசாலை, S. I. பழனி

பிராஞ்சு:-(1) 2-88, அய்யாமுதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை
„ (2) 195, செட்டியார் தெரு. கொழும்பு.

தமிழ் மணி

சென்னை—விஷு வருஷ புரட்டாசி 12உ (28—9—1941)

மலை கெல்லி எலி!

இன்று இலங்கை செல்வம் பொங்கும் ஒரு தீவாக இருப்பதற்கு இந்தியரே காரணம்; இந்தியரே இலங்கைச் செல்வத்தைச் செழிக்கச் செய்தனர். என்றாலும், இலங்கைச் சிங்களவர், இலங்கைச் செல்வத்துக்குக் காரணமாயிருந்த இந்தியரை இலங்கையிலிருந்து வெருட்டிவிடச் சதி செய்து வருகின்றனர்; இந்தியருக்குரிய உரிமைகள்கூடக் கொடுக்க மறுக்கின்றனர். இலங்கை இந்தியர் பிரச்னை தீராத பிரச்னையாக இருந்து வந்தது. இலங்கையிலிருந்து சென்ற தூது கோஷ்டியினர், இந்திய சர்க்காருடன் கலந்தாலோசித்து, ஒரு சமரசம் ஏற்படுத்த முயன்றனர். இலங்கை கோஷ்டியினரின் பிடிவாதத்தால் டில்லிப் பேச்சு வார்த்தை முறிந்தது கடைசியில் இந்தியாவிலிருந்து ஒரு தூதுக் கோஷ்டியினர் சர். வாஜ்பேயர் தலைமையில் இலங்கைக்குச் சென்றனர். இலங்கைத் தூதுக் கோஷ்டியினருடன் இரண்டு வாரங்களாகக் கலந்து ஆலோசித்தனர்; மீண்டும் இலங்கையர் பிடிவாதஞ் செய்ததால், இலங்கைப் பேச்சு வார்த்தைகூட முறிந்துவிடும் நிலைமையிலிருந்தது. என்றாலும், இரு சார்பிலும் விட்டுக்கொடுத்து, ஒருவித சமரச முடிவுக்கு வந்தனர்; ஒரு ஒப்பந்தஞ் செய்து கொண்டனர். ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் விவரமாக வெளிவரவில்லை. ஆனால், புதுடில்லியிலிருந்து வந்திருக்கும் ஜோசியங்களைப் பார்த்தால், இலங்கை-இந்திய சர்க்கார் பிரதிநிதிகளுக்கிடையே நடந்த ஒப்பந்தம், மலை கெல்லி எலி பிடித்த கதையாகத்தான் இருக்குமோவென்று சந்தேகிக்கவேண்டி இருக்கிறது.

தகராறு என்ன?

இலங்கை-இந்திய சர்க்கார் பேச்சு வார்த்தை ஒரு சமரசமாகத் தீருவதற்குப் பெரிய முட்டுக் கட்டையாக இருந்த விஷயங்கள் இரண்டு; இலங்கையில் குடியேறிய இந்தியருக்கு வோட்டுரிமை உண்டா, இல்லையா? இது ஒரு விஷயம்; இலங்கையிலிருக்கும் இந்தியரை வெருட்ட இலங்கைச் சர்க்கார் செய்த அநியாயச் சட்டங்கள் நியாயமானவை தானா? இந்த இரு விஷயங்களில்தான் அபிப்ராய பேதம் வளர்ந்தது. இலங்கையர் முதலில் பிடிவாதமாக இருந்தார்கள். இலங்கையில் குடியேறிய இந்தியருக்கு வோட்டுரிமை கொடுக்க மறுத்தனர்; கடைசியாக ஒரு வழிக்கு வந்தனர். இலங்கை இந்தியர் வோட்டுரிமை சம்பந்தமாக இந்தியத் தூதுக்கோஷ்டியினர் வெற்றிபெற்றதாகச் சொல்ல முடியாது புதிய ஒப்பந்தப்படி இலங்கையில் குடியேறும் இந்தியரில் பெரும்பான்மையோருக்கு வோட்டுரிமை இருக்காது. வோட்டுரிமை பெற்ற இந்தியர் இப்பொழுது இருப்பதைவிடக் குறைவாக இருப்பார்களென்று தெரிகிறது. 12 வருடங்களில், 7 வருடம் இலங்கையில் வசித்து வந்த பாத்யதை பெற்றவர்களுக்கு மட்டுமே வோட்டுரிமை இருக்குமாம்! தற்போதிருக்கும் ஏற்பாட்டின்படி 5 வருடம் இலங்கையிலிருந்தால் போதும்; அவர்களுக்கு வோட்டுரிமை உண்டு. புதிய ஒப்பந்தம் முன்னிலும் மோசமானது என்பதற்கு இந்த ஒரு நிபந்தனையே போதிய சான்றாகும். வோட்டுரிமை பெற மற்றொரு நிபந்தனையும் இருக்கிறது. குடும்பங்களுடன் இலங்கையிலிருந்தால்தான் வோட்டுரிமை உண்டென மற்றொரு நிபந்தனையும் இருக்கிறது. இந்த நிபந்தனையையும் இந்தியத் தூதுகோஷ்டியினர் ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. இலங்கையில் குடியேறிய இந்தியர் இலங்கையிலிருந்து ஒரு வருடம் வெளியிலிருந்தாலும் போதும்; வோட்டுரிமை பறி போய்விடும்.

உள்ளதும் போச்சு!

இனிமேல் இலங்கைக்குள் இலங்கை சர்க்கார் கோரும் அளவுக்கே குறிப்பிட்ட தொழிலாளர் அனுமதிக்கப்படுவார்கள்; அவர்களுக்கு வோட்டுரிமை கிடையாது. இது போன்ற நிர்ப்பந்தங்களைப் பார்த்தால் இலங்கை-இந்திய சர்க்கார் ஒப்பந்தம் இந்தியருக்கு ஒரு வெற்றியென்று சொல்லமுடியாது. இலங்கை இந்தியரின் வோட்டுரிமையை, இலங்கையர் வெகு சாதுர்யமாகப் பறித்துவிட்டார்கள். பர்மா ஒப்பந்தத்தைப்போல், இலங்கை-இந்தியர் ஒப்பந்தம் அவ்வளவு மோசமாக இல்லை. என்றாலும் இலங்கை—இந்தியருக்கு ஏற்கனவே இருந்த உரிமைகள் கூடப் பறிபோயிருக்கின்றன வென்பதை மறுக்க முடியாது. ஒப்பந்தத்தின் முழு விவரங்களையும் அறிந்தால்தான் இலங்கை-இந்தியரின் உண்மை நிலைமை என்ன வென்பது தெரியும். ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம்; இலங்கை இந்தியர் உரிமைகளைப் பாதுகாக்கச் சென்ற இந்தியத் தூதுக் கோஷ்டியினர், மலைகெல்லி எலி பிடித்திருக்கிறார்கள்! அவர்கள் தூது சென்றதின் பயன் இந்தியருக்கு அனுகூலமாக இல்லை; அவசர கோலம் அள்ளித்தெளி என்ற தோரணையில் இந்த ஒப்பந்தஞ் செய்தார்கள் போலும்!

தர்ம உபதேசம்!

தர்ம உபதேசஞ் செய்வதில் ரூஸ்வெல்ட் பெரிய நிபுணர். அவருடன் சர்ச்சில் சேர்ந்து வெளியிட்ட, 8 யுத்த லட்சியங்கள் இந்தியா விஷயத்தில் செல்லுமா என்று ஹிந்து மகா சபைத் தலைவர் சவர்க்கார் ரூஸ்வெல்ட்டுக்குத் தந்தியடித்துக் கேட்டது ஞாபகமிருக்கலாம்; ரூஸ்வெல்ட் அதற்குப் பதில் கொடுக்கவே இல்லை. 40 கோடி இந்திய மக்களின் உரிமையை, ரூஸ்வெல்ட் துட்சமாக மதித்து, 60 லக்ஷம் யூதர்களுக்குத் தர்ம உபதேசஞ் செய்யப் புறப்பட்டிருக்கிறார்! யூதர்களின் புது வருட தினத்தில் ரூஸ்வெல்ட் அனுப்பியிருக்கும் செய்தியில், “தற்காலிகமாக இருள் சூழ்ந்திருந்தாலும், சுதந்திரம் அழியாது! எல்லா மக்களும் சமத்துவமாக வாழும்பொருட்டு நாம் செய்யவேண்டிய கடமைகளுக்கு நம்மை மீண்டும் அர்ப்பணஞ் செய்வோமாக!'' என்று குறிப்பிட்டிருக்கிறார். நல்ல உபதேசந்தான்! ஆனால், இதுவும் அட்லாண்டிக் உபதேசத்தைப் போலவே இருக்குமா, அல்லது, இதற்கு ரூஸ்வெல்ட் வேறு வியாக்யானஞ் செய்யப் போகிறாரா? எல்லா மக்களும் சமத்துவமாக வாழவேண்டுமென்றால், அந்த மக்களில் கருப்பரும் சேர்ந்திருக்கிறார்களா, அல்லது, வெள்ளையருக்கு மட்டும் இந்த உபதேசமா? ரூஸ்வெல்ட் இதற்கு என்ன வியாக்யானஞ் செய்யப் போகிறார்?

பிரமாதப் பேச்சு!

மத்திய மாகாணக் கவர்னர், நரசிங்கப்பூர் டிவிஷன் யுத்தக் கமிட்டியின் ஆதரவில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசியபோது, “இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய சர்க்கார் எம்மாதிரி அமைக்கப் படவேண்டும் என்பதோ, அல்லது, வகுப்புப் பிரச்னையை எப்படித் தீர்த்துக்கொள்ளுவது என்பதோ அவ்வளவு பெரிய பிரச்னையல்ல; அவைகளை நிறுத்தி வைத்துவிடலாம். ஹிட்லரோடு சண்டை போடும் சமயத்தில் பொறுமை மிக அவசியம். பிரிட்டிஷ் ஆட்சியைவிட, ஹிட்லர் ஆட்சியைக் காந்திஜியோ, ஜின்னாவோ, அல்லது எந்த இந்தியரோ விரும்பமாட்டார்களென்பது நிச்சயம்!'' என்று சொன்னார் மெய்தான்; யாரும் ஹிட்லர் ஆட்சியை விரும்பமாட்டார்கள்; ஹிட்லர் ஆட்சியை விரும்பும் இந்தியர் கிடையவே கிடையாது ஆனால், அதற்காக இந்தியர் சுதந்திரத்தையும், உரிமையையும் தூரத் தள்ளிவைத்து விடுவதா? ஹிட்லரை முறியடிப்பதில் இவ்வளவு ஆர்வங் காட்டும் பிரிட்டிஷார், யுத்தம் முடிந்ததும், இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதாக, ஏன் வாக்குறுதி கொடுக்கக் கூடாது? அவ்வாறு வாக்குறுதி கொடுக்கச் சந்தர்ப்பமில்லையா; அல்லது, வாய் திறந்து சொன்னால், பிரிட்டிஷார் வாய் முத்துச் சிதறிவிடுமா? பிரிட்டிஷார் யுத்த லட்சியங்களைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறார்கள். ஆனால், அந்த லட்சியங்கள் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் செல்லாது என்று சர்ச்சில்கூடப் பகிரங்கமாகச் சொல்லிவிட்டார்! சர்ச்சில்பேச்சைக் கேட்ட பின்னும், மத்திய மாகாண கவர்னர் பசப்புவது ஆச்சரியந்தான்!

பிரிவினை ஏன்?

தியோலி சிறையிலிருக்கும் பாதுகாப்பு கைதிகளின் துயரங்களைப்பற்றி, என். எம். ஜோஷி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். பாதுகாப்புக் கைதிகளை மனிதர் என்ற முறையில் நடத்த வேண்டும்; அவர்களை மிருகங்களைப்போல் நடத்துவது கூடாது என்றே அவர் சொல்லுகிறார். கைதிகளை முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு என்று பிரிவினை செய்வதும் சரியல்ல; சகல பாதுகாப்புக் கைதிகளையும் ஒரே வகுப்பாக நடத்தவேண்டும். இதற்குச் சர்க்கார் ஒரு சாக்குப் போக்குச் சொல்லலாம். எல்லாக் கைதிகளையும் ஒரே வகுப்பில் வைத்தால், அதிகச் செலவாகுமென்று சொல்லலாம். செலவு ஏற்படாமலேயே, அந்தக் குறையை நிவர்த்தி செய்ய முடியும். சகல பாதுகாப்புக் கைதிகளையும் ஒரே வகுப்பில் வைத்து அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஆகாரங்களைச் சர்க்கார் கொடுத்தால் போதும்; மேலே வேண்டியவைகளைக் கைதிகள் சொந்தச் செலவில் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்துவிட்டால், சர்க்காருக்கு அதிகச் செலவு ஏற்படாது; பாதுகாப்புக் கைதிகளின் கஷ்டங்களும் குறையும்; பாதுகாப்புக் கைதிகளுக்கு உறவினர்தான் பணம் அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனை கூடாது. கைதிகளின் உறவினர் அனுப்பலாம்; அல்லது, நண்பர்கள் அனுப்பலாம். யார் அனுப்பினால் என்ன? கைதிகள் ஏழையாக இருந்தால், நண்பர்கள் உதவிச் செய்யக் கூடாதா? ஏழைப் பாதுகாப்புக் கைதிகளின் உறவினருக்குச் சர்க்கார் உதவிச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மற்றொரு கஷ்டமும் இருக்கிறது. பாதுகாப்பு கைதிகளை அந்தந்த மாகாண சிறையிலேயேவைத்திருக்க வேண்டும்; வேறு மாகாணங்களுக்குக் கொண்டுபோவது சர்க்காருக்குச் செலவு; அந்தக் கைதிகளைப் பார்க்க வரும் உறவினர்களுக்கும் அனாவசியமான செலவு ஏற்படுகிறது. வேறு மாகாணங்களில் வைப்பதே சரியெனச் சர்க்கார் சொல்லுவார்களேயானால், கைதிகளைப் பார்க்க வரும் உறவினருக்குச் சர்க்காரே எல்லாச் செலவுகளும்கொடுக்க வேண்டும். பொதுப்படச் சொல்ல வேண்டுமேயானால், சிறைகளிலிருக்கும் அரசியல் கைதிகள் நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது; அவர்களை மேல், கீழ் என்று பிரிவினை செய்வது கூடாது. சகல கைதிகளையும் மனிதத் தன்மையுடன் நடத்த வேண்டும். சர்க்கார் சகல அரசியல் கைதிகளின் விஷயத்திலும் போதிய கவனஞ் செலுத்துவார்களாக.

மணியோசை

ஏ· வி· தக்கர் பாபா,
திருச்சி·

பாபுஜி,

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் செய்துவரும் சேவை சொல்லுந்தரமன்று. தள்ளாத இந்த வயதில்கூட, நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வெகு சுறு சுறுப்புடன் வேலை செய்து வருகிறீர்கள். உங்கள் ஜீவியத்தையே, அந்த ஏழை மக்களுக்காக அர்ப்பணஞ் செய்து விட்டீர்களென்று சொல்லலாம்! தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சேவை செய்வது பெரிய காரியமல்ல; நீங்கள், அவர்களுடனிருந்து, அவர்களுடன் உண்டு, உடுத்திப் பழகுவதுதான் தியாகங்களில் பெரிய தியாகமாகும். சிலர் ஹரிஜன சேவையில் ஈடுபடலாம்; தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உழைக்கலாம். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களுடன் நெருங்கிப் பழகுவதில்லை; அவர்களைச் சமமாக ஏற்றுக் கொள்ளுவதுமில்லை. அத்தகைய சேவை கூடவே கூடாது. அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதிலும், சேவை செய்யாமல் ஒதுங்கியிருப்பது மேல். ஆனால், நீங்களோ, அந்த வகையைச் சேர்ந்தவர்களல்ல; உள்ளும் புறமும் ஒரே எண்ணங் கொண்டிருக்கிறீர்கள். நீங்களும் ஒரு தாழ்த்தப்பட்டவர் என்ற எண்ணத்துடன் சேவை செய்து வருவதே சிறந்த சேவை. சேர்மாதேவியில், தாழ்த்தப்பட்ட மக்கள் கூட்டத்தில் பேசிய போது, நீங்கள் ஒரு உண்மையை அவர்களுக்கு எடுத்துச் சொன்னீர்கள். "நமது நாட்டில் பல ஜாதி, வகுப்புகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்; அது தவறு; ஜாதி, வகுப்புகளே கிடையாது. இந்திய மக்கள் எல்லோரும் ஒரே சமூகந்தான்; ஒவ்வொருவரும் இந்நாட்டு மக்கள்; இந்நாட்டு மன்னர்; எல்லோரும் உயர்ந்த ஜாதிகளே! தாழ்த்தப்பட்டவர்கள் கிடையாது" என்று சொன்னீர்கள். ஆம்; உண்மை. தாழ்ந்தவன் என்ற எண்ணத்துக்கே இடங் கொடுக்கலாகாது. பார்ப்பனர் உயர்ந்தவர்; பறையர், தாழ்ந்தவர் என்று நினைக்கக் கூடாது. பார்ப்பனரும் மனிதர்தான்; பறையர், பள்ளர் எல்லோரும் மனிதர்தான். பார்ப்பனருக்கு 10 தலைகள், 20 கண்களில்லை; 20 கை கால்களுமில்லை. அவர்களும் நம்மைப்போல் மனிதர்களே; ஜாதி ஹிந்துக்களும் நம்மைப்போல் மனிதர்தான். அவர்கள் ராட்சதப் பிறவிகள் அல்ல! மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கிடையாது; எல்லோரும் ஒன்றே என்ற எண்ணம் ஏற்படவேண்டும். இந்த எண்ணம் ஏற்படுமேயானால், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் தானாகவே அடிபட்டுப் போகும். தாழ்த்தப்பட்ட மக்கள், உங்கள் உபதேசத்தைக்கேட்டு மனஉறுதி கொள்ளுவார்களா? அவர்கள் மனஉறுதியுடன், சகல மக்களுடனும் பழக முன்வருவார்களேயானால், கோவிலுக்குள் செல்லக் கூடாது என்ற தடை எங்கிருந்துவரும்? கிணறுகளில் ஜலம் எடுக்கக் கூடாது; அருகில் வரக்கூடாது! எட்ட நில் என்று சொல்ல யார் துணிவார்கள்? யாருக்குத்தான் வாய் வரும்? வாய் வந்தால், அவர்கள் வாய்த் திமிரை, ஜாதி இறுமாப்பை அடக்க நம்மிடம் வழி இருக்கிறது; நம்மிடம் அந்த சக்தி உண்டென்பதை எல்லா மக்களும் உணரவேண்டும். ஜாதி பேதத்தை ஒழிப்பதற்கு இந்த உணர்ச்சியே மிக அவசியம்; உங்களுடைய உயர்ந்த உபதேசம் சகல மக்கள் மனதிலும் பசு மரத்தாணிபோல் பதியுமென்று நம்புகிறேன்.

டிங்—டாங்

எஸ்· சத்தியமூர்த்தி ஐயர்,
சென்னை

மூர்த்திகளே,

எங்கு சென்றாலுஞ் சரி; வைதிக எண்ணமும், குறும்புத்தனமும் உங்களை விட்டுத் தொலையாது! அது சாம்பலோடு சாம்பலாகத்தான் தீர வேண்டும்; உயிருள்ள வரையில் அந்த இறுமாப்பு அழியவே அழியாது! இத்தகைய மனப்பான்மையுடைய உங்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஹாஸ்டலைத் திறந்து வைக்கும் வைபவத்துக்குத் தலைமை வகிக்க அழைத்ததுதான் விசித்திரமாக இருக்கிறது! உங்கள் பேச்சு அழகாகத்தானிருந்தது. ஹரிஜன் என்ற பெயரே அழிந்துவிட வேண்டுமென்று சொன்னீர்கள். நான் ஒன்று சொல்லுகிறேன்; உங்களைப் போன்ற வைதீகர்களும், சுதர்மவாதிகளும் இருக்கிறவரையில் ஜாதி பேதம் ஒருநாளும் அழியப்போவதில்லை! நெற்றிக்கிடுவது போன்ற வெறும் சடங்குகளிலும், வெளி ஆடம்பரங்களிலும் நீங்கள் மூழ்கிக் கிடக்கின்றீர்கள். வெறும் ஆடம்பரம் ஜாதியை உயர்த்தி விடாது. உத்தமன் எவனோ அவனே உயிர் குலத்தவன்; அதமன் எவனோ, அவனே தாழ்ந்த குலத்தவன். இது ஒரு புறமிருக்க, உங்கள் பதவிபித்து எங்கு சென்றாலும் உங்களைத் தொடர்ந்தே வருகிறது! "டாக்டர் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயப்பிரவேசம் வேண்டாம் என்று சொல்லுகிறார்; ஆனால், அவருக்கு வைசிராய் நிர்வாக சபை பிரவேசம் வேண்டுமாம்! நாம் அதிகாரப் பதவியில் இருந்தால், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகளை 10 வருடங்களில் செய்து முடித்து விடலாம்"! என்று சேர்மாதேவியில் சொன்னீர்கள். டாக்டர் அம்பேத்கார் உங்களைப் போன்ற பதவி மோகம் பிடித்தவரே! அவருக்குத் தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றிக் கவலை கிடையாது. அவருக்குப் பதவி கிடைத்தால் போதும். உங்களுக்கும் அந்த எண்ணந்தான்! 10 வருடமல்ல; 100 வருடங்களுக்கு நீங்கள் அதிகாரத்திலிருந்தபோதிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் எதுவும் செய்யப் போவதில்லை. இது சத்தியம்; காந்திஜி, தக்கர்பாபா போன்ற புண்ணிய ஆத்மாக்களே தாழ்த்தப்பட்ட மக்களைக் கை தூக்கி விட அவதரித்தவர்கள்! நீங்களல்லவென்பதை ஒரு முறைக்குப் பன்முறை வற்புறுத்திக் கூறுகிறேன்! நீங்கள் சமய சஞ்சீவிகள்! சந்தர்ப்பத்தைக் கவனித்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பரிந்து பேசுகிறவர்கள். பேச்சுடன் உங்கள் கடமை தீர்ந்து விடும். உங்கள் ஜாதி இறுமாப்பு என்றும் தலை நிமிர்ந்துதான் நிற்கும்; அந்தத் திமிர் என்றும் அழியாது!

டிங்—டாங்

வெங்கட்டராமய்யர்,
சென்னை·

ஐயரே;

தமிழ் இசைக்காக நீங்கள் ரொம்பவும் பரிவு காட்டுகிறீர்கள்; அதே சமயத்தில் பிற பாஷைப் பாட்டுக்கள் அழிந்து விடுமோவென்று கலங்குகிறீர்கள். பிற பாஷைகளும், பிற பாஷைப் பாட்டுக்களும் அழிந்து போக வேண்டுமென்று தமிழர் என்றும் விரும்பியதே இல்லை. தமிழ் பாட்டுக்களை ஏராளமாகப் பாடவேண்டும்; தமிழ் பாட்டுக்கள் அபிவிருத்தியடைய வேண்டுமென்பதுதான் தமிழர் விருப்பம். தியாகராயர் கீர்த்தனைகளைத் தமிழில் பாடா விட்டால் அந்தக் கீர்த்தனைகள் அழிந்துவிடாது. தெலுங்குப் பாட்டுக்களைப் பாடவும், அவற்றை அபிவிருத்தி செய்யவும் தெலுங்கர் இருக்கிறார்கள். அதற்காக நீங்கள் நீலிக் கண்ணீர் வடிக்க வேண்டியதில்லை! தெலுங்குப் பாட்டுக்களுக்காகத் தமிழ் பாட்டுக்களையும், இசையையும் கொலை செய்து விடுவதா? ஒருபோதும் கூடாது? இதுவரையில் இதர பாட்டுக்களைக் கேட்டு, ரசித்தவர்களெல்லாம் முட்டாள்களா என்று நீங்கள் கேட்கிறீர்கள்; இது வரையில் அந்தப் பாட்டுக்களைக் கேட்டு ரசித்தவர்கள் முட்டாள்களல்ல; அவர்கள் முட்டாள்களா என்று கேட்பவர்களே வடி கட்டிய முட்டாள்கள்! ஏனெனில், தமிழர்பெருமனது படைத்தவர்கள்; எந்தப் பாஷை பாட்டுக்களையும், அவர்கள் வெறுப்பதில்லை. அதற்காக அவர்களுக்கு முட்டாள்ப்பட்டம் கொடுப்பதென்றால், அதுதான் பெரிய முட்டாள்த்தனம் என்பதை மறந்துவிடாதீர்கள்!

டிங்—டாங்

வி· டி. சவர்க்கார்,
பம்பாய்.

ஹிந்துத் தலைவரே,

சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் சேர்ந்து வெளியிட்ட அட்லாண்டிக் யுத்த லட்சியங்கள் இந்தியாவுக்குச் செல்லுமா என்று ரூஸ்வெல்ட்டுக்குத் தந்தி கொடுத்துக்கேட்டிருந்தீர்கள். ரூஸ்வெல்ட் பதில் கொடுக்கவில்லை; மௌனம் சாதித்திருக்கிறார். சர்ச்சில் உண்மையைக் கூறிவிட்டார்; என்றாலும், ரூஸ்வெல்டுக்கு மீண்டும் தந்தி கொடுத்து அவர் மானத்தை வாங்கிவிட்டீர்கள்! யுத்த லட்சியமென்று ஒரு அறிக்கைவெளியிட்டு, ரூஸ்வெல்ட், சர்ச்சிலுக்குத் தாளம் போடுகிறாரா என்று கேட்டிருக்கிறீர்கள். ஆம்; வெள்ளையர் ஒருவருக் கொருவர் தாளம் போடுகிறவர்கள்தான்! அட்லாண்டிக் யுத்த லட்சியங்களுக்குச் சர்ச்சில் செய்த வியாக்கியானத்தை மறுத்து, ரூஸ்வெல்ட் வேறு வியாக்யானஞ் செய்வாரென்று நான் நினைக்கவில்லை. சர்ச்சிலுக்கு, ரூஸ்வெல்ட் சப்பட்டையல்ல; அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்! அவ்வளவுதான்; இன்றேல், இதுவரையில், இந்த யுத்தம் இந்தியாவை நாலா பக்கமும் சூழ்ந்து வருவதைக் கண்டும், இந்தியருக்குரிய உரிமைகளைக் கொடுக்கும்படி அமெரிக்கர், பிரிட்டிஷாரை வற்புறுத்தாமலிருப்பார்களா? இந்தியரிடம், அமெரிக்கருக்கு ரொம்ப அனுதாபம் இருக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். அதெல்லாம் வெறும் கனவு! நிற இறுமாப்பு எல்லா வெள்ளையருக்கும் உண்டு; பிரிட்டனிடம், அந்த இறுமாப்பு தலைக்குமேல் 20 அடி ஏறியிருந்தால், அமெரிக்கரிடம் அந்த இறுமாப்பு 10 அடிக்குக் குறையாமலாவது ஏறியிருக்கும்! இந்தியர் சுதந்திரத்துக்கு அமெரிக்கர் பரிந்து பேசுவார்கள்; இந்தியருக்கு உதவிக்கு வருவார்களென்ற எண்ணம் உங்களுக்கு இருக்குமேயானால், அந்த எண்ணத்தை அடியோடு மறந்துவிடுங்கள்! அதைப்பற்றிக் கனவில்கூட நினைக்க வேண்டாம்!

டிங்—டாங்

சர். சுல்தான் அகமத்,
சிம்லா.

நிர்வாக சபை மெம்பரே,

புலிக்கு வைத்திருந்த பொறியில் பூனை அகப்பட்டுக் கொண்ட மாதிரி, வங்கப் புலி பஸ்லுல் ஹக்கை வரவேற்கக் காத்திருந்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டக் காரரிடம் நீங்கள் போய்ச் சிக்கிக் கொண்டீர்கள்! சிம்லா ஸ்டேஷனில் வந்து இறங்கியதும், அங்கு கூடியிருந்த கருப்புக் கொடி லீகர், உங்களைச் சூழ்ந்து கொண்டு, வைசிராய் நிர்வாக சபையிலிருந்து ராஜிநாமா செய்யும்படி கூச்சலிட்டனர்! நீங்கள் அதற்கு என்ன பதில் சொன்னீர்கள்? சிரித்துக் கொண்டே "ஜின்னா ஜிந்தாபாத்!" என்றீர்கள். ஆம், அதுதான் லீகருக்குச் சரியான பதில். ஜின்னா லீகுக்குச்சர்வாதிகாரியாக இருந்தால் போதும்; லீகைப்பற்றியோ அல்லது, முஸ்லிம் சமூகத்தைப் பற்றியோ கவலையே வேண்டாம். இத்தகைய குருட்டுக் கொள்கையில் லீகர் மூழ்கிக் கிடப்பதால்தான், ஜின்னா அதிக அகம்பாவம் கொண்டிருக்கிறார். அவருடைய அகம்பாவமும் எல்லையின்றி அதிகரித்துக்கொண்டே போகிறது. இது எங்குபோய் முடியுமோ யார் கண்டது?

டிங்—டாங்

பண்டித குன்ஸ்ரு,
நாகபுரி.

மிதவாத மணியே!

இந்திய ராணுவ நிலையங்களை நேரில் கண்டபின்தான் இந்திய ராணுவத்தில், இந்தியர் எவ்வளவு குறைவாக இருக்கிறார்களென்ற ஞானோதயம் உங்களுக்கு ஏற்பட்டது போலும்! இந்த யுத்தம் வந்திருக்காவிட்டால், இந்திய ராணுவங்களில் இந்தியர் இன்னமும் குறைவாக இருந்திருப்பார்கள்; ராணுவ சேவையும், உணர்ச்சியுமே இந்தியரிடமிருந்து அடியோடு அடிபட்டுப் போனாலும் போயிருக்கலாம்! ஏதோ நன்மைக்குத்தான் இந்த யுத்தம் வந்தது. இந்தியரின் ராணுவ உணர்ச்சிக்கு இந்த யுத்தம் ஒரு தூண்டுகோலாக இருக்குமென்று நம்புகிறேன். இந்தியரிடம் ராணுவ உணர்ச்சியை உண்டுபண்ணுவதிலும், இந்திய ராணுவத்தை இந்தியர்மயமாக்குவதிலும், சர்க்கார் எவ்வளவு தூரம் வேலை செய்து வந்திருக்கிறார்களென்பதை இதிலிருந்தாவது நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்களென்று நினைக்கிறேன்!

டிங்—டாங்

மணிவேலன்

அல்லது

ஏழைகளின் தோழன்

ஓர் இனிய நாவல்

200 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. 1-8-0

மானேஜர்:—
"தமிழ் மணி"
மதராஸ்.

டம்-டம் குண்டு

நாடிழந்த ராஜா மந்திரி! ❁ நாதியற்ற நவாப்கள்!

நாடிழந்த ராஜா மந்திரிகளுக்கும், நாதியற்ற நவாப்களுக்கும் இன்று புகலிடம் லண்டன்! லண்டனில்தான் இன்று சர்வ தேசங்களின் சர்க்கார்களும் காட்சியளிக்கின்றன! லண்டனில்தான் இன்று பலதேச மன்னர்கள் இன்று கொலுவீற்றிருக்கின்றனர்! உலகில் வேறு எங்கும் காணாத ராஜா, மந்திரிகளேயும், ராணிகளேயும் அங்கு இன்று காணலாம். நாடிழந்த ஐரோப்பிய மன்னர்களும், மந்திரிகளும் இன்று லண்டனில்தானிருக்கிறார்கள் லண்டனிலிருந்து கொண்டு, அவர்கள் நாடுகளேப் பறித்த ஹிட்லரை எதிர்த்துவருகிறார்கள். ஹிட்லர் லண்டனேக் குறிவைத்துக் கடுமையாகத் தாக்கியதற்கு இந்தக் கோபந்தான் காரணமோ என்னமோ சொல்ல முடியாது. ஜெக்கோ தலேவர் லண்டனிலிருக்கிறார்; ஜெக்கோ சர்க்காரின் பிரதிநிதி அவரே என்று சொல்லுகிறார் ஜெக்கோவுக்கு எப்படியும் சுதந்திரம் தேடிக்கொடுக்க அவர் லண்டனில் "காம்ப்" போட்டிருக்கிறார்! அதேபோல், போலந்து சர்க்கார் தலேவரும் மந்திரிகளும் லண்டனில்தான் ஜாகை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களும் போலந்து சுதந்திரத்தை மீண்டும் நிலேநாட்டவே லண்டனில் ஒரு சர்க்காரை நடத்தி வருகிறார்கள். நார்வே மன்னரும், மன்னர் குடும்பத்தினரும் லண்டனில்தானிருக்கிறார்கள் ஹாலந்து ராணியின் சர்க்காரும், லண்டனில்தானிருக்கிறது. பெல்ஜியம் மன்னர் நாஜியரிடம் சிறைப்பட்டிருக்கிறார்; ஆனால், பெல்ஜியம் மந்திரிகள் லண்டனில் ஒரு பெல்ஜிய சர்க்காரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாஜியரிடம் சிக்கிட பிரான்ஸ் போக விச்சி சர்க்கார் ஒரு பகுதியில் அதிகாரம் செய்து வருகிறார்கள். லண்டனிலும் ஒரு சுதந்திர பிரஞ்சு சர்க்கார் இருக்கிறது. அதற்கு டி'கால் தலேவர்; கிரீஸ், யூகோ மன்னர்களும் லண்டனில்தானிருக்கிறார்கள்; அவர்களும் தங்கள் சர்க்கார் லண்டனிலேயே இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, லண்டனில் பிரிட்டிஷ் சர்க்கார்மட்டுமல்ல, பல ஐரோப்பிய தேசங்களின் சர்க்கார் மயமாக லண்டன் விளங்குகிறது! இது லண்டன் செய்த புண்ணியந்தான்!

ஃ ஃ ஃ

இந்த சர்க்கார்களெல்லாம் லண்டனுக்கு வரக் காரணமென்ன? லண்டன் ஒன்றுதான் இச் சமயத்தில் அவர்களுக்குப் புகலிடம் கொடுக்க கூடியது. லண்டனிலிருந்து கொண்டு, இழந்த அவர்கள் நாடுகளே மீண்டும் பெற பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்து வருகின்றனர். நாஜியரை முறியடித்தால், இன்று, நாஜியரின் கீழ் மிதிபடும், நாஜி அடிமை நாடுகளுக்கெல்லாம் பூர்ண சுதந்திரம் தேடிக் கொடுப்பதாக பிரிட்டிஷார் வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியை நம்பி, நாடிழந்த ராஜாக்களும், ராணிகளும், மந்திரிகளும் லண்டனுக்கு வந்து தஞ்சமடைந்திருக்கின்றனர். நாஜி ஜெர்மனிக்கு அடிமையான நாடுகளுக்குப் பூர்ண சுதந்திரம் தேடிக் கொடுப்பதே தங்கள் யுத்த லட்சியம்; ஜனநாயகத்தைக் காப்பாற்றவே பிரிட்டன் நாஜியரை எதிர்த்துப் போராடி வருவதாகப் பிரிட்டிஷார் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். ஆகவே, பிரிட்டிஷாரை நம்பி, லண்டனில் போய் சகல சர்க்கார்களும் கூடாரமடித்திருக்கின்றன! பிரிட்டிஷார் மட்டுமல்ல; அமெரிக்கர்கூட பிரிட்டனுடன் சேர்ந்து தாளம் போடுகின்றனர். பிரிட்டிஷ் முதன் மந்திரி சர்ச்சிலும், அமெரிக்கத் தலேவர் ரூஸ்வெல்ட்டும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடைந்தெடுத்து வெளியிட்ட 8 யுத்த லட்சியங்களின் நோக்கம் அதுதான்! ஆகவே, நாஜியரிடம் அடிமைப்பட்ட நாடுகளுக்குப் பூர்ண சுதந்திரம் தேடிக் கொடுக்கும் நோக்கம் பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் இருக்கிறது. பிற நாடுகளுக்கு, அதாவது, ஆசியா நாடுகளுக்கு அந்த யுத்த லட்சியம் செல்லாது; இதைச் சர்ச்சில் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் தெளிவாக்கிவிட்டார்! மன்னன் பேச்சுக்கு மறு பேச்சு உண்டா? இனிமேல் இந்தியர் வாய் திறக்கவும் முடியாது. "கப்-சிப்-கபர்தார்!"

லண்டன் செய்த புண்ணியம்!

"கப்-சிப்-கபர்தார்!"

கரடியாய்க் கதறினரே!

ஃ ஃ ஃ

லண்டனிலிருக்கும் நாஜி அடிமை நாடுகளின் பிரதிநிதிக ளடங்கிய கூட்டமொன்று லண்டனில் நடந்தது; அந்தக் கூட்டத்துக்குப் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி ஈடன் தலேமை வகித்தார். ஜெக்கோ, போலந்து, நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், சுதந்திரப் பிரான்ஸ் முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். ரஷிய சர்க்காரின் லண்டன் ஸ்தானிகர் மெஸ்கியும் அந்தக் கூட்டத்துக்குச் சென்றிருந்தார். சர்ச்சில்-ரூஸ்வெல்ட்டின் 8 யுத்த லட்சியங்களே ஆதரிக்கவே அக்கூட்டம் நடந்தது. கானடா, ஆஸ்திரேலியா, தென்னுப்பிரிக்கா யூனியன் சர்க்கார் பிரதிநிதிகளும் அக்கூட்டத்துக்குப் போயிருந்தார்கள். இந்த யுத்த லட்சியம் அந்த நாடுகளுக்குச் செல்லுமோ, என்னமோ, அது சர்ச்சிலுக்குத்தான் தெரியும்! ஆனால், இந்தியாவுக்கும், அந்த 8 யுத்த லட்சியங்களுக்கும் சம்பந்தமே இல்லேயென்று சர்ச்சிலும், இந்திய மந்திரி அமெரியும் கரடியாகக் கதறியுங்கூட, அந்தக் கூட்டத்திற்கு அமெரி ஏன் போயிருந்தார்? இரும்படிக்கிற இடத்தில் ஈக்கு என்ன வேலே? அவர் யார் பிரதிநிதியாக அந்தக் கூட்டத்துக்குச் சென்றிருந்தாரென்பதை பிரிட்டிஷ் சர்க்கார் தெரிவிக்கவில்லே. அவர் வேடிக்கை பார்க்கப் போயிருந்தால் சரி; அவர் இந்தியா சர்க்காரின் சார்பாகப்போயிருந்தால், அது பிரிட்டிஷாருக்கும், இந்திய சர்க்காருக்கும் பெரிய மானக்கேடாக இருக்குமென்பதில் சந்தேகமில்லே.

ஃ ஃ ஃ

அட்லாண்டிக்கின் 8 யுத்த லட்சியங்களே அடிமைப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளெல்லாம் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அந்த லட்சியத்தை ஆதரித்து பேசியவர்கள் நிலேமையைத் தெளிவுபடுத்திப் பேசவில்லே; அந்த லட்சியங்கள் ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் செல்லும்; இதரநாடுகளுக்குச் செல்லாதுஎன்று யாரும் சொல்லவே இல்லே. அவர்கள் நாட்டின் சுதந்திரத்தைத் தேடிக் கொள்ளுவதோடு அவர்கள் திருப்தியடைந்தார்கள். ஆம்; அவர்கள் திருப்தியடையாமல் வேறு என்னதான் செய்யமுடியும்? பிரிட்டிஷாருக்கு அண்ணன் தம்பிகளே அந்த

(அடுத்த பக்கம் பார்க்க)

கோவை

கந்தன் & கோ

—: தயாரிக்கும் :—

ஆராய்ச்சிமணி

அல்லது

மனுநீதிகண்ட சோழன்

—: முக்கிய நடிகர்கள் :—

P. B. ரங்காச்சாரி

M. R. சந்தானலக்ஷ்மி

T. S. துரைராஜ்

விரைவில் எதிர்பாருங்கள் !!!

டம்-டம் குண்டு

முன் பக்கத் தொடர்ச்சி

-: ஈக்கு என்ன வேலை? :-

அடிமைத்தனம் இனிக்குமோ?

உலகம் சிரிக்குமே!

விசித்திர ஜால வித்தை!

சிம்லாவுக்குக் காவடி!

ஐரோப்பிய நாடுகள்! ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகள் இன்று அடிமைப்பட்டிருந்தாலும், அவைகள் ஏகாதிபத்திய நாடுகள்; அவர்களுக்குக் கிடைக்கும் சுதந்திரம் அவர்கள் ஆட்சியிலிருக்கும் ஏகாதிபத்திய அடிமை நாடுகளுக்கு உண்டா, இல்லையா வென்பதைப் பற்றி, அந்நாட்டுப் பிரதிநிதிகள் பேசாமல் மௌனஞ் சாதித்ததில் ஆச்சரியமொன்றுமில்லை! வெள்ளையருக்கு ஒரு நீதி; கருப்பருக்கு மற்றொரு நீதியா? பிரிட்டனிடம் கற்ற பாடத்தை, அந்தக் குட்டி ஏகாதிபத்திய நாடுகள் எப்படி மறந்துவிட முடியும்? அடிமைப்பட்டுள்ள கருப்பர் நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுக்க விரும்பாத ஏகாதிபத்திய வெள்ளை நாடுகள், நாஜி ஜெர்மனியின் ஆட்சியிலிருந்து விடுதலையடைய மட்டும் என்ன உரிமை இருக்கிறது? அடிமைப்பட்டுள்ள கருப்பர் நாடுகளை நசுக்க, வெள்ளை ஏகாதிபத்திய நாடுகளுக்கு உரிமை இருக்கிறதென்றால், தனக்கு அடிமைப்பட்டுள்ள வெள்ளையர் நாடுகளை நசுக்க நாஜியருக்கு உரிமை இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்? கருப்பர் நாடுகளை நசுக்குவது வெள்ளை நாடுகளுக்கு இனிமையாக இருக்கலாம்; தேன் போல் தித்திக்கலாம்! அதே வெள்ளை நாடுகள் அடிமைப்பட்டால். அந் நாடுகளுக்கு அந்த அடிமைத்தனம் கசப்பாக இருக்கிறது! வெள்ளையருக்குக் கசப்பாக இருக்கும் அடிமைத்தனம், கருப்பருக்குக் கசப்பாக இருக்காதோ? கருப்பருக்கு மட்டும் அடிமைத்தனம் இனிக்குமோ? அடிமைத்தனத்திலும், வெள்ளை அடிமைத்தனம் கருப்பு அடிமைத்தனம் என்ற பாகுபாடா?

ஃ ஃ ஃ

ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய நாடுகள், அடிமை நாடுகளைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாது போனாலும், அந்தக் கூட்டத்துக்குச் சென்றிருந்த ரஷியப் பிரதிநிதி மெய்ஸ்கி, ரஷியாவின் கொள்கை என்ன வென்பதைத் தெளிவுபடுத்தினர். இதர ஏகாதிபத்திய நாடுகளுக்கு அது சரியான சவுக்கடியாகும்! அட்லாண்டிக் லட்சியங்களை ஏற்றுக் கொள்ளுவது அவசியந்தான்; சோவியத் ரஷியா ஆதிமுதல் அதே கொள்கையில் உறுதி கொண்டிருக்கிறதென்பதை அவர் தெளிவுபடுத்தினர். எல்லா நாடுகளுக்கும் சுதந்திர உரிமையுண்டு; சகல நாடுகளும் பூர்ண சுதந்திரம் பெறவேண்டும்; தன் இஷ்டப்படி சர்க்காரை அமைத்துக் கொள்ளவும் உரிமையுண்டு. ஜனங்களின் உரிமைகளை ஆக்ரமிப்பதையும் ஆக்ரமிப்பு நாடுகள் மற்ற நாடுகளை அடிமைப்படுத்தி வைப்பதையும் ரஷியா ஆதிமுதல் கண்டித்தே வந்திருக்கிறது. ரஷியா இந்தக் கொள்கையைக் கடைசிவரையில் ஆதரித்தே தீரும்; மெய்ஸ்கி பேச்சின் கருத்து இதுதான்.

ஜனநாயகத்துக்காகப் போராடுவதாகப் பிரிட்டன் சொல்லுகிறது; அமெரிக்கா அதற்குத் தாளம் போடுகிறது. என்றாலும், வெள்ளையர் ஜனநாயகம், கருப்பர் ஜனநாயகம் என்று பாகுபடுத்துவது பெரிய துரோகமாகும்; உலகத்தையே அது வஞ்சிப்பதாகும்! ரஷியாவிடம் அந்தப் பாகு பாட்டைக் காணோம். அட்லாண்டிக் யுத்த லட்சியத்துக்கு வியாக்யானம் செய்யும் உரிமை பிரிட்டிஷாரிடமும், அமெரிக்கரிடமும், இதர ஏகாதிபத்திய ஐரோப்பிய நாடுகளிடமும் மட்டுமில்லை; ரஷியாவுக்கும் அந்த உரிமை இருக்கிறதென்று தெளிவாகிவிட்டது. யுத்தம் முடிந்தபின், ரஷியா இந்த உரிமையைப் பூர்ணமாக உபயோகித்துக் கொள்ளுமா, அல்லது, ஜனநாயகத்தைக் காப்பாற்றும் இந்த உரிமையைக் காற்றோடு பறக்கவிட்டுவிடுமா? ரஷியா அதன் லட்சியத்தைக் கைவிடுமேயானல், ரஷியா இருந்தும் ஒன்றுதான்; இல்லாமலிருப்பதும் ஒன்றுதான்! இன்று எந்த லட்சியத்துக்காக ரஷியா இந்தப் போரில் அகப்பட்டுக் கஷ்டப்படுகிறதோ, எந்த லட்சியத்துக்காக லட்சக்கணக்கான மக்களை போர்முனைகளில் பலி கொடுக்கிறதோ, அந்த லட்சியத்தை ரஷியா மறந்துவிடாதென்றே நினைக்கிறேன். ரஷியாவின் லட்சியத்தை பிரிட்டனும் பின்பற்றுவதுதான் அதற்குக் கௌரவம்; இன்றேல், பிரிட்டனின் ஏமாற்று வித்தையைக் கண்டு உலகம் சிரிக்குமென்பது நிச்சயம்!

ஃ ஃ ஃ

சர்ச்சிலும், பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும், லண்டனில் எந்தவிதமான ஜாலவித்தை காட்டுகிறார்களோ, அதே ஜால வித்தைகளையே இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியான வைசிராய் பிரபுவும் காட்டி வருகிறார்! வைசிராயின் ஜால வித்தையோ இன்னமும் விசித்திரமானது! அவருடைய வித்தைகள் பலிக்குமென்று வைசிராய் நினைத்தார்; ஆனல், பலிக்கவில்லை! அவருடைய வித்தையே அவருக்கு வினையாக வந்து முடிந்தது! காங்கிரசுக்கு விரோதமாக லீகைத் தட்டிக் கொடுத்தார்; அத்துடன் மைனரிட்டிகளையும் தூண்டிவிட்டார்! எந்த லீகரை அவர் தட்டிக் கொடுத்து, அதன் ஆதரவு பெற நினைத்தாரோ, அதே லீகர் அவரைக் காலை வாரிவிட்டனர்! அந்த லீகின் ஆதரவையும் வைசிராய் இழந்தார்! ஆனல், அந்த லீகில் பிளவு ஏற்பட்டிருப்பதைக் கண்டு அவர் பூரிப்படைந்திருக்கலாம்! அவர் பூரிப்படைந்திருக்காவிட்டால், அவர் தரிசனம் பெறச் சிம்லா வந்த வங்க மந்திரி பஸ்லுல் ஹக்கை முதுகில் தட்டிக் கொடுத்து வரவேற்க வேண்டிய அவசியமே இல்லை! பஸ்லுல் ஹக், ஜின்னவின் "பத்வா"வை எதிர்த்து, லீக் நிர்வாகக் கமிட்டியிலிருந்து விலகினர்; அதே சமயத்தில் வைசிராய் ஏற்பாடு செய்த யுத்தப் பாதுகாப்புக் கவுன்சிலிலிருந்தும் ராஜிநாமா செய்தார். இதனல் அவர் வங்க லீக் எதிர்ப்புக்கு உள்ளானர். அவர் மந்திரி சபையிலேயே பிளவு ஏற்பட்டது. அவர் மந்திரி சபையிலுள்ள நிதி மந்திரி சுஹ்ராவர்தி, வங்க மாகாண லீக் கமிட்டியின் காரியதரிசி. அவரே ஹக்கைக் கண்டித்துத் தீர்மானஞ் செய்ய ஏற்பாடு செய்தார். அதன் பயனக சுஹ்ராவர்திமீது வங்க சட்ட சபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தது. அதில் ஏற்பட்ட தகராறு காரணமாக வங்க அசம்பெளியை ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. பஸ்லுல் ஹக் நிலைமை தர்ம சங்கடமான நிலைமைக்கு வந்துவிட்டது! மந்திரி சபையிலிருப்பதா, அல்லது, அதைக் கலைத்துவிடுவதா? கலைத்துவிட்டால், மீண்டும் மந்திரி சபை அமைக்க முடியுமா என்பதே கேள்வி. வங்க சட்டசபையிலுள்ள வெள்ளையர் ஆதரவு இல்லாமல் ஹக் மந்திரி சபை அமைக்க முடியாது; அந்த வெள்ளையர்களின் ஆதரவு இல்லாமல் ஹக் மந்திரி சபை நீடித்திருக்கவும் முடியாது! ஆகவே, அவர் மந்திரி சபைக்கு ஆதரவு தேடவும், வைசிராயைக் கண்டு பேசவும், சிம்லாவுக்குக் காவடி எடுத்துக் கொண்டு ஓடினர்!

(அடுத்த பக்கம் பார்க்க)

LEPROSY, ASTHMA & T. B. SPECIALIST.

எனது சகோதரர் நாடிப் பரீக்ஷையில் மகா நிபுணர் வைத்தியபதி

R. M. கருப்புசாமி பிள்ளை.

எமது சென்னை வைத்தியசாலையில் இருக்கிறர்.

உங்கள் குடும்பத்தில் யாருக்கு என்ன வியாதியிருந்தாலும் சரி! அவரிடம் நேரில் வந்து கன்சல்ட் செய்யுங்கள். நேரில் வர முடியாதவர்கள் வியாதியை எழுதினல் மருந்துகள் V. P. P யில் அனுப்புவார்கள். [கன்சல்டிங் பீஸ் இல்லை]

கன்சல்டிங் நேரம் } காலை 7-மணி முதல் 10மணி வரை. மாலை 3 „ 7 „

இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கக்கூடியது

பழனி R. M. K **தங்க மாத்திரை**

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைக்கட்டி, பலஹீனத்தைப் போக்கி, நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதை சகலரும் சாப்பிடலாம். விந்தில் கருவமைக்கும் சக்தியுள்ளது.

100 வேளை தங்க மாத்திரை, மஹா மன்மத காம கேசரி ரூ. 10

50 வேளை தங்க மாத்திரை, அல்வா ரூ. 5. (கியாட்லாக் இனம்.)

F. M. S. & S. S. வாசிகள் ரூ. 2. கூட்டி முன் பணம் அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர், **ஆர். எம். கே. வேலுசாமி,**

சித்த வைத்தியசாலை, (ஸ்தாபிதம் 1900) பழனி.

பிராஞ்சுகள்:—16, (மேல்மாடி). திருவல்லிக்கேணி ஹைரோடு சென்னை. 68, செட்டியார் தெரு. கொழும்பு.

டம்-டம்-குண்டு (முன்பக்கத் தொடர்ச்சி)

காவடிக்குக் கருப்புக் கொடி! தட்டா, குட்டா? – வைசிராய் குஷி! மயான வைராக்யம்! :–: :–: தோப்புக்கரணம் போட்டார்களா?

பஸ்லுல் ஹக்கின் காவடிக்குச் சிம்லாவில் கிடைத்த வரவேற்பு என்ன தெரியுமா? லீகரின் கருப்புக்கொடி! சுமார் 400 லீகர், சிம்லாவில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள். இது வங்காளத்திலுள்ள முஸ்லிம்களுக்குப் பெரிய கோபத்தை உண்டுபண்ணிவிட்டது! அவர்கள் ஹக்கை ஆதரித்தனர். ஹக்குக்குக் கறுப்புக்கொடி காட்டினால், அதற்குப் பதிலுக்குப் பதில் செய்யத் தயார் என்று வங்க முஸ்லிம்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் பதிலுக்குப் பதில் செய்வது இருக்கட்டும்; இந்தக் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தினால், லீகில் பிளவு அதிகரிப்பதை சிம்லா ஆர்ப்பாட்டக்காரர் மறந்தது வருந்தத்தக்கதே. சிம்லாவில் வைசிராய் பஸ்லுல் ஹக்கை, ஏன் தட்டிக்கொடுத்தார்? கருப்புக் கொடியைக் கண்ட உற்சாகத்தில்தான் தட்டிக் கொடுத்திருக்க வேண்டும்! ஹக்கை, வைசிராய் பிரபு தட்டிக் கொடுத்ததானது, ஜின்னாவைத் தலையில் குட்டியது போலாகும்! ஹக், யுத்தப் பாதுகாப்புக் கவுன்சிலிலிருந்து விலகியது வைசிராய்க்கு வருத்தமில்லை; அவர் ஜின்னாவை எதிர்த்து, லீக் நிர்வாகக் கவுன்சிலிலிருந்து விலகியதுதான் வைசிராய்க்குக் குஷி! ஹக், வைசிராயிடம் என்ன பேசினாரென்பது தெரியவில்லை. வங்க சட்டசபையிலுள்ள வெள்ளையரின் ஆதரவைத் தேடிக்கொடுக்க ஹக் கேட்டிருக்கலாம்; வைசிராய் அவருக்கு வாக்குறுதி கொடுத்தாரோ என்னமோ அதுவும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், ஹக்கைத் தட்டிக் கொடுத்த வைசிராய் பிரபு, பாஞ்சால முதன் மந்திரி சர். சிக்கந்தரைப் பாராட்டவில்லை யென்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஏன்? சர். சிக்கந்தர், ஜின்னாவை எதிர்க்கத் துணியவில்லை; ஜின்னாவை எதிர்க்கத் துணியாமல், அவருடைய எதேச்சாதிகாரத்துக்குத் தலை சாய்த்தார்! வைசிராய் நிர்வாகக்கவுன்சிலுக்கும், யுத்தப் பாதுகாப்புக் கவுன்சிலுக்கும், கங்காணிபோல் வைசிராய்க்கு ஆட் தேடிக் கொடுத்த சர். சிக்கந்தர், கடைசியில் வைசிராயை நட்டாற்றில் விட்டதை லார்டு லின்லித்கோ பிரபுவால் எப்படிச் சகித்துக்கொண்டிருக்க முடியும்? சிக்கந்தரிடமுள்ள கோபத்துக்கு இதுதான் காரணம். ஆனால், வைசிராயின் கோபம் நீடிக்கப் போகிறதா? இல்லை; இந்தக் கோபம் மயான வைராக்யத்துக்குச் சமம்; நொடிப் பொழுதில் மறைந்துவிடும்!

ஃ ஃ ஃ

வைசிராயைக் கண்டு பேசிய பஸ்லுல் ஹக், சர். சிக்கந்தரையும் கண்டு பேசினார். சர் சிக்கந்தர் நோய்பட்டு, இப்பொழுதுதான் ஓரளவு குணமடைந்திருக்கிறார்; இருவரும் பரஸ்பரம் அவர்கள் நிலைமையை விட்டுக் கொடுத்துப் பேசினார்களென்று தெரிகிறது. ஆனால், அவர்கள் உன்னாலே நான் கெட்டேன்; என்னாலே நீ கெட்டாய் என்று தோப்புக்கரணம் போட்டுக் கொள்ளவில்லை! பம்பாயில் கூடிய லீக் நிர்வாகக் கமிட்டியின் நடவடிக்கைகளை, சர். சிக்கந்தர், பஸ்லுல் ஹக்கிடம் விவரமாக எடுத்துச்சொன்னார்; வங்காள லீகின் நிலைமையை எடுத்துக்கூறி, இனிமேல் என்ன செய்யலாமென்று ஹக் யோசனை கேட்டாராம் ஒரு வேளை சர். சிக்கந்தரையும் லீக் நிர்வாகக் கவுன்சிலிலிருந்து ராஜிநாமா செய்யும்படி ஹக் யோசனை சொல்லியிருக்கலாமென்று ஒரு வதந்தி! காங்கிரஸ் மந்திரிகள் எவரும் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கத்தினர்களாக இருக்கவில்லை. அதுபோல் லீக் மந்திரிகள், லீக் நிர்வாகக் கவுன்சிலில் இல்லாமலிருப்பதே நல்லதென்று ஹக், சிக்கந்தருக்கு உபதேசஞ் செய்திருக்கலாம். அந்த உபதேசத்தைக் கேட்டு, சிக்கந்தர் என்ன முடிவுக்கு வந்திருக்கிறாரோ தெரியவில்லை; ஆனால், சர். சிக்கந்தரும், லீக் நிர்வாகக் கவுன்சிலிலிருந்து ராஜிநாமா செய்ய உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. சர். சிக்கந்தரின் நண்பர்கள் அது வெறும் வதந்தி என்று சொல்லுகிறார்கள். சர். சிக்கந்தர், லீக் நிர்வாகக் கவுன்சிலிலிருந்து ராஜிநாமா செய்தாலுஞ் சரி, செய்யாது போனாலுஞ் சரி, லீகிலும், ஜின்னாவின் சர்வாதிகாரத்திலும் சர். சிக்கந்தருக்குப் புளிப்புத் தட்டிவிட்டது உண்மை! லீகில் பெரிய பிளவு ஏற்படாது போயினும், ஏதோ ஒரு சிறு பிளவு ஏற்பட்டு விட்டது; இந்தச் சிறு பிளவே, இறுதியில் ஒரு பெரிய பிளவாக மாறினாலும் மாறலாம்! லீகில் பிளவு ஏற்படுமேயானால், இன்று, லீகில் சர்வாதிகாரஞ் செய்யும் ஜின்னாவின் தலைமைப் பதவி ஆட்டங் கொடுத்து விடுவது நிச்சயம்!

ஃ ஃ ஃ

சிம்லாவிற்கு காவடி எடுத்துச் சென்ற ஹக்கின் கோரிக்கை எவ்வளவு தூரம் வெற்றியடைந்திருக்கிறதென்பது ரகசியமாகவே இருக்கிறது! ஹக்கை, வைசிராய் தட்டிக் கொடுத்த போதிலும், அவர் கோரிக்கையைத் தட்டிக் கொடுத்த அதற்கு ஆதரவு தேடிக் கொடுத்ததாகக் காணோம்! வங்க ஐரோப்பியர் விஷயத்தில் வைசிராய் தலையிட விரும்ப மாட்டாரென்றே சொல்லிக் கொள்ளுகிறார்கள்! வங்க மந்திரி சபையைக் கலைத்து விட்டு, ஒரு புதிய மந்திரி சபையை ஏற்படுத்த வேண்டுமென்பது ஹக்கின் ஆவல். ஆனால், புதிய மந்திரி சபை அமைப்பதென்றால், வெள்ளையர் ஆதரவு கண்டிப்பாக வேண்டும். தற்போது மந்திரி சபையிலுள்ள சில லீகர்களை விலக்கிவிட ஹக் நினைக்கிறார். அப்படியானால், வங்காள லீகிலும் பிளவு ஏற்பட்டே தீரும். இவ்வித பிளவுக்கு இடங்கொடுக்க வங்க மந்திரி சபையிலுள்ளவர்கள் விரும்பவில்லை. ஹக்கின் யோசனை, நிதி மந்திரி சுஹ்ராவர்திக்கு அடிவயிற்றில் நெருப்பைக்கொட்டியதுபோலாகிவிட்டது! அவருடைய மந்திரி பதவி போய்விட்டால் என்ன செய்வது? அதற்காக ஹக்குடன் சமரசஞ்செய்துகொள்ள வேலை செய்துவருகிறார். வங்க சர்க்காரில் உயர்ந்த பதவி வகிக்கும் அவருடைய உறவினரைக் கொண்டு, ஹக்குடன் சமரசஞ்செய்துகொள்ள மந்திரி சுஹ்ராவர்தி ரகசியமாக வேலை செய்து வருகிறாரென்பது தெரிகிறது. அவருடைய முயற்சி பலிக்குமா, பலிக்காதா வென்பதைப்பற்றி இப்பொழுது ஜோசியஞ் சொல்ல முடியாது. எல்லாம் வங்க சட்ட சபையிலுள்ள ஐரோப்பிய மெம்பர்களைப் பொறுத்திருக்கிறது. ஹக் மந்திரி சபையின் சூழ்ச்சமக் கயிறு வங்க வெள்ளையரிடமிருக்கிறது. அவர்கள் நினைத்தால் ஹக் மந்திரி சபையைக் காப்பாற்றலாம்; இன்றேல் அடியோடு கவிழ்த்துவிடலாம்! ஹக், கல்கத்தா வந்து சேர்ந்தபின் எல்லாம் வெட்டவெளிச்சமாகிவிடும். ஹக் போக்கு என்னவென்பதும் தெரிந்துவிடும்.

சக்தி அப்ரேக்

நீர் ரோக சஞ்சீவி

அதிக மூத்திரம், நீரில் சர்க்கரை, நாவரட்சி முதலியவைகளை 20 நாளில் பூர்ண சௌக்கியப்படுத்தும்

விவரங்களுக்கு:

சக்தி நிலையம்,
S. S பிள்ளை தெரு, தூத்துக்குடி.

கண்டு மயங்காத பேர்களுண்டோ!

செப்டம்பர் 24 முதல் | சென்னை பாரகனில் | 2 வது வாரம்

மதுரை முருகன் டாக்கீஸாரின்

அசோக்-குமார்

M. K. தியாகராஜ பாகவதர்

V. நாகையா – N. S. கிருஷ்ணன்
P. கண்ணம்பா – T. A. மதுரம்

மற்றும் பலர் நடித்தது.

வசனம்: இளங்கோவன் | டைரக்ஷன்: R. C. சேகர் | பாட்டு: பாபநாசம் சிவன்

மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம் – 12வது வாரம்
பெங்களூர் 11 வது வாரம்
திருநெல்வேலி, காரைக்குடி – 10 வது வாரம்
வேலூர் 6 ,,
நாகர்கோயில் 5 ,,
விருதுநகர் 4 ,,
மைசூர் 3 ,,
புதுக்கோட்டை 2 ,,

இப்படத்தின் பாட்டுக்களை ஒடியன் & H. M. V. ரிகார்டுகளில் கேளுங்கள்.

Sri MURUGAN MADURA

அங்கும்-இங்கும்

விதிவழி மதி சென்றது!

நாச கால யுத்தம்!

இன்பக் கனவு பலிக்குமா?

கண்ட பலன் என்ன?

ஒரே பிணக்காடு!

விதி வழி மதி சென்றது என்பதுபோல், ஜெர்மனியின் விதியே, ஹிட்லர் மதியை மயக்கி, அவரை இந்த நாசகால ரஷிய யுத்தத்தில் கொண்டுபோய் விட்டது! கீவ் வெற்றியில் ஹிட்லரின் இன்பக் கனவு ஒருவகையில் நிறைவேறி இருக்கலாம். ஆனால், அந்த இன்பக் கனவு கடைசிவரையில் நிலைத்து நிற்குமா என்பது சந்தேகமே. ரஷியப் போர்முனைகளில் ஜெர்மன் ராணுவங்கள் படும்பாடு கடவுளே அறிவார். அதை இந்த கண்கொண்டு பார்க்க முடியாது. கீவைக் கைப்பற்ற, சில ஜெர்மன் ராணுவங்கள் நிர்வாணமாக ஒரு நதியை நீந்திக் கடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாம்! அது மட்டுமா? ஜெர்மன் ராணுவங்கள், ஜெர்மனியர் பிணக் குவியல்மீது நடந்து செல்ல வேண்டியது வந்தது. அதேபோல், ரஷிய ராணுவங்களும், ரஷிய ராணுவங்களின் பிணக்குவியல்மீது நடந்து சென்று பின்வாங்க நேரிட்டது. இவ்வாறு, ரஷிய போர்முனைகளில் இரு சாரிலும் பெரும் நஷ்டம்; ரஷியர் சொல்லுவதுபோல், இந்த யுத்தத்தில் ஜெர்மனிக்கு 30 லக்ஷம் துருப்புகள் நஷ்டமென்றால்; ரஷியாவுக்கும் அதேபோல் 30, அல்லது 35 லக்ஷம் நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை மொத்தத்தில் ரஷியப் போர்முனைகளில் சுமார் 60, அல்லது, 65 லக்ஷம் துருப்புகள் பலியாகி இருக்கலாம் சுமார் 20, அல்லது, 25 ஆயிரம் விமானங்களும், 30, 35 ஆயிரம் டாங்கிகளும் நஷ்ட மேற்பட்டிருக்கலாம். இன்னம் பீரங்கி, துப்பாக்கிகள் எத்தனை லக்ஷமோ யார் கண்டது? இந்தக் கண்றாவிக் காட்சியைக் கண்கொண்டு பார்க்க முடியுமா?

ஃ ஃ ஃ

இத்தனை லக்ஷம் துருப்புகளைப் பலி கொடுத்தும், ஹிட்லர் கண்ட பலன் என்ன? ஒன்றுமில்லை. கேவலம் பெட்ரோல், எண்ணெய், கோதுமை முதலியவைகளுக்காக ஹிட்லர் இத்தனை லக்ஷக்கணக்கில், ஜெர்மன் மக்களைப் பலி கொடுத்து வருகிறார். இன்னம் எத்தனை லக்ஷக் கணக்கில் பலிகொடுக்க வேண்டியிருக்குமோ சொல்ல முடியாது. கீவ் நகரைப் பிடிக்க மட்டும் சுமார் 2 லக்ஷம் துருப்புகளைப் பலி கொடுத்திருக்கிறார்; லெனின்கிராடைக் கைப்பற்ற 4 அல்லது, 5 லக்ஷம் துருப்புகளை அவர் பலி கொடுத்துத்தான் தீர வேண்டும். இவ்வளவு பலி கொடுத்தும், யுக்ரேய்ன் கோதுமை அவர் கைக்கு வந்ததா? இல்லை; ஒரு கோதுமை மணியைக்கூட அவர் கண்ணால் கண்டிருப்பாரோ, என்னமோ சந்தேகந்தான்! யுக்ரேய்ன் கோதுமையெல்லாம் ரஷியாவுக்கு போய் விட்டது. கீவ், ஒரு பிணக் காடாகவே இருந்தது; அந்தப் பிணக் காட்டைத்தான், ஹிட்லர் கண்டார்! அந்தப் பிணக் காட்டிற்காகவே அவர் லக்ஷக்கணக்கில் துருப்புகளைப் பலி கொடுத்தார்! இதுவரையில் ஜெர்மனியர் கைப்பற்றியிருக்கும் ரஷிய நகரங்களும், கிராமங்களும், வெறும் பொட்டல் காடுகளாகவே இருக்கின்றன. அங்கு ஆகாரம் கிடையாது; இந்த நிலைமையில் ஜெர்மன் ராணுவங்கள் ரஷியாவில் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. இன்னமும் சரியான மழையும், பனியும் ஆரம்பமாகவில்லை; பனி அதிகரித்துவிட்டால், இந்தச் சங்கடங்கள் இன்னமும் அதிகமாகும்.

ஃ ஃ ஃ

ரஷியாவுக்கு வெகுதூரத்தில் ஜெர்மனி இருக்கிறது. ஜெர்மனியிலிருந்து யுத்த சப்ளைகள் வர வேண்டும். யுத்த சப்ளைகளும், ஆகாரங்களும் வந்து சேருவதற்கு அதிக நாளாகும். இந்த நிலைமையில், ஜெர்மன் துருப்புகள் நிம்மதியாகச் சண்டை செய்ய முடியுமா? முடியாது. ரஷியாவில் பெய்யும் மழை, பனியால் போக்குவரத்து மிகக் கஷ்டத்திலிருக்கிறது. ஆகாரப் பஞ்சமும் அதிகம்; ரஷியாவில் ஆகாரத்துக்கு வழியில்லை. ஆகவே, ரஷியப் போராட்டத்தை நீடித்து நடத்துவதென்றால், ஜெர்மனியருக்கு மிகச் சிரமந்தான். இந்தச் சிரமத்தையெல்லாம் அறிந்தே, ஜெர்மனியர், மாஸ்கோமீது படையெடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டுக் கிழக்கு நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றனர்! கிழக்கே போவது சுலபமல்ல; ஜெர்மனியர் கைப்பற்றத் துடிக்கும் காகாஸஸ் எண்ணெய்க்கிணறுகளும் சமீபத்தில் இல்லை; அந்த எண்ணெய்க் கிணறுகளை அடையவேண்டுமென்றால், கருங்கடல் ஆதிக்கம் ஜெர்மனியர் கைக்குவர வேண்டும். கருங்கடலிலோ ரஷியர் ஆதிக்கம் இருந்து வருகிறது. அங்கு ரஷியக் கடற்படைகள் நல்ல பலத்துடனிருக்கின்றன! கிரிமியா தீவின் துறைமுகமாகிய செபாஸ்டபூல் ரஷியர் கடற்படைத்தளம். கருங்கடல் ஆதிக்கம் வேண்டுமேயானால், கிரிமியா தீவை ஜெர்மனியர் கைப்பற்ற வேண்டும். அதற்காகவே ஜெர்மனியர் அத் தீவை வளைத்துக்கொள்ள முயற்சிக்கின்றனர். அங்கு மும்முரமான யுத்தம் ஆரம்பமாகிவிட்டது.

ரஷியாவில் ஜெர்மனியர் நிலைமை ஆபத்திலிருக்கிறதென்பதற்கு, ஜெர்மனியர் பிற நாடுகளின் உதவியைத் தேடுவதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். ருமேனிய ராணுவங்களை ரஷிபப் போர்முனைக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். இதாலி, ஸ்பெய்ன் துருப்புகளும் ரஷியப் போர்முனைகளுக்கு வந்திருக்கின்றன கடைசியில் பல்கேரியாவையும் இந்த யுத்தத்தில் இழுத்துவிட ஹிட்லர் சூழ்ச்சி செய்கிறார்! பல்கேரியா மன்னர் போரிஸ்கூட ஹிட்லரின் திவ்ய தரிசனத்துக்குத் தவங் கிடக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது! பல்கேரியா மன்னர் ஹிட்லரைத் தேடி ஓடினார்; ஓடியும் என்ன பயன்? பல்கேரியாவை'வசப்படுத்திக் கொள்ள ஜெர்மானியர் முனைந்து விட்டனர். பல்கேரியாவுக்கும், ரஷியாவுக்கும் பழைய நட்புண்டு; என்றாலும், பல்கேரியா ஜெர்மனிக்குப் பயந்து அந்த உறவை ரத்து செய்து விட்டது ஹிட்லர் பல்கேரியாவை விட்டாரா? இல்லை; ரஷியாவை எதிர்த்து யுத்தஞ் செய்யும்படி அவர் பல்கேரியாவை வற்புறுத்தினார். பல்கேரியா ரஷியாவை எதிர்த்து யுத்தம் செய்யாவிடில், பல்கேரியாவை எதிர்த்து, அதை எடுத்து வாயில் போட்டுக்கொள்ளப் போவதாக மிரட்டினார். பாவம், பல்கேரியா என்ன செய்யும்! பணிந்து விட்டது பல்கேரியாவில், ஜெர்மன் இதாலித் துருப்புகளும், கிரீஸ், யுகோஸ்லாவியா துருப்புகளும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. பல்கேரியத் துறைமுகங்களும், ரயில்வே போக்குவரத்துகளும் இன்று ஜெர்மனியர் கையிலிருக்கின்றன. என்றாலும், பல்கேரிய மந்திரி என்னமோ கதை பண்ணுகிறார்! கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை யென்று ஜம்பம் பேசுகிறார்! பல்கேரிய ராணுவங்கள் ரஷியாவை எதிர்த்து யுத்தஞ் செய்யப் போவதில்லையாம்! ரஷியர், பல்கேரியாவை எதிர்த்தால், தற்காப்புச் செய்து கொள்ளவே பல வகையிலும் ராணுவங்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்களாம்! சொல்லுகிறவர் சொன்னால் கேட்கிறவருக்கு மதியில்லையா? தற்காப்புக்காக ராணுவங்களைச் சேர்த்து வைப்பதென்றால், பல்கேரியா என் நாஜியர் வசமாகவேண்டும்? நாஜி, இதாலி, யுகோ, கிரீஸ் ராணுவங்களும், ஜெர்மன் கடற்படைகளும் பல்கேரியா துறை முகங்களுக்கு வந்து குவிய வேண்டிய அவசியமென்ன? ரஷியாவை எதிர்க்கவே அந்தப் படைகள் சேகரிக்கப் படுகின்றனவென்பதில் சந்தேகமென்னவிருக்கிறது? அங்கு ஏராளமாக படைகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு, ரஷியாவை எதிர்க்க ஹிட்லர் திட்டம் போட்டிருக்கிறார். பால்கனிலும் ஒரு பெரிய யுத்தத்தை ஜெர்மனியர் ஆரம்பித்தே தீருவார்கள். ஜெர்மன் கடற்படைத் தலைவர் ரேடர், ராணுவத் தளகர்த்தர் முதலியோர் பல்கேரியாவுக்கு வந்திருப்பதிலிருந்து இது தெளிவாகிறது.

ஃ ஃ ஃ

இந்தச் சமயத்தில், துருக்கியையும் தர்ம சங்கடமான நிலைமையில் ஹிட்லர் வைத்திருக்கிறார். இதாலி யுத்த நாடு; அதன் யுத்த கப்பல்கள், நாசகாரிகள், சப்மரைன்கள் கருங்கடலுக்கு வரமுடியாது. அவற்றைத் துருக்கி டார்டனெல்ஸ் மூலம் அனுமதிக்காது. ஆகவே, இதாலி யுத்தக் கப்பல்களையும், சப்மரைன்களையும் விலைக்குப் பல்கேரியா வாங்கிக் கொள்ளுவதுபோல் பாசாங்கு செய்து, அவற்றைக் கருங்கடலுக்குள்கொண்டு வர யோசனை போட்டிருக்கிறார். துருக்கி அந்தக் கப்பல்களை அனுமதிக்க முடியாது. ஏனெனில், பல்கேரியா ஏற்கனவே நாஜியுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டு, நாஜி ஜெர்மனிக்கு உதவிச் செய்து வருகிறது; அது ஒரு யுத்த நாடு; யுத்த நாடு என பிரிட்டன், ரஷியா முதலிய நாடுகள் அறிவித்திருக்கின்றன. இந்த நிலைமையில் துருக்கி, பல்கேரியாவுக்குப் போகும் இதாலி யுத்தக் கப்பல்களை அனுமதிக்காது. "வந்தது வம்பு; இறக்கடி கூடையை!" என்று சொல்லுவதுபோல், இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு ஜெர்மனி, துருக்கியையும் வம்புச் சண்டைக்கு இழுக்கலாம்! டார்டனெல்ஸைக் கைப்பற்றிக்கொண்டு, இதாலி யுத்தக் கப்பல்களைக் கருங்கடலுக்குக் கொண்டுவந்து, அவற்றின் உதவியால் கருங்கடலில் ரஷியப் படைகளை எதிர்த்து, கருங்கடல் மூலம் கிழக்கேயுள்ள ரஷியப் பிரதேசங்களுக்குள் இறங்கலாம். அதே சமயத்தில், பல்கேரியா எல்லையிலிருந்து துருக்கி வழியாக இரான், இராக் எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்றவும் ஜெர்மன் ராணுவங்கள் துணியலாம். இரானிலும், இராக்கிலும் ஏற்கனவே, பிரிட்டிஷ் ரஷியப் படைகளிருக்கின்றன. ஆனால், அந்தப் படைகள் இன்னமும் ஏராளமாக இருக்கவேண்டும். ரஷியாவில் வெற்றி பெற்று, ஜெர்மன் படைகள் இரான் இராக்கை நோக்கி வந்தால், அங்கு ஜெர்மன் படைகளை நெருக்கிவிடக் கூடிய படைப் பலம் பிரிட்ட

(அடுத்த பக்கம் பார்க்க)

மனோரதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்குமென்பதில் சந்தேகமில்லை. கீவைக் கைப்பற்றிய ஜெர்மன் ராணுவங்கள் முன்னேற முடியாது போகும். கீவில் ஜெர்மனியரை முறியடிக்கும் பொறுப்பு ரஷியாவைச் சார்ந்தது. ரஷியா கீவை எதிர்த்து மீண்டும் கைப்பற்றுமா, அல்லது, ஜெர்மனி அதிக தூரம் முன்னேற விடாமல் தடுத்து, தற்காப்பு யுத்தத்தை நடத்துமா என்பது தெரியவில்லை. கீவுக்குக் கிழக்கே ஜெனரல் புடானியின் ராணுவங்கள் ஜெர்மன் ராணுவங்களை எதிர்த்துத் தீவிரமாகச் சண்டை செய்து வருகின்றன.

ஃ ஃ ஃ

இந்த மழை காலம் முடிவதற்குள் லெனின்கிராட், மாஸ்கோ, கார்காவ், ராஸ்டோவ் ரயில் பாதை வரையில் பிடித்துக்கொண்டு, பிடித்த இடங்களைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது ஜெர்மனியின் எண்ணம். ஆனால், அவர்கள் எண்ணம் கைகூடவில்லை. ஆகவே, மழை காலத்திலும் யுத்தத்தை தொடர்ந்து நடத்தப் போவதாகச் சொல்லுகிறார்கள். கீவ் வெற்றி ஜெர்மனிக்கு இன்னமும் அதிக உற்சாகத்தைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை தெற்கேயுள்ள ஜெர்மன் ராணுவங்கள் கார்காவ் நோக்கிச் சென்று அங்கிருந்து, கிரிமியா தீவு போக்குவரத்தை வெட்டி, காகாஸஸ் எண்ணெய்ப் பிரதேசங்களை நோக்கிச் செல்லலாம். ஜெர்மன் ராணுவங்களின் திட்டமும் அதுதான் சுமார் 70,000 ஜெர்மன் துருப்புகள் கிரிமியாவைத் தாக்குவதில் மும்முரமாக இருக்கின்றன. வடக்கே லெனின்கிராட் யுத்தமும், தெற்கே கிரிமியா யுத்தமும் கடுமையாக இருக்கின்றன. ஒடிஸ்ஸா நிலைமை பழைய நிலைமைதான்; அங்கு ரஷியர் எதிர்ப்பு இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது. ஒடிஸ்ஸா போர் முனையில் ருமேனியா துருப்புகள் பாதிக்குமேல் அழிந்தன. ஆகவே, ஜெர்மன் துருப்புகள் அங்கு உதவிக்கு வரவேண்டியதாயிற்று. பல்கேரியாவை ஜெர்மனியர் தாண்டி வருவதின் நோக்கமும் இதுதான். கிழக்கே கிரிமியாவைச் சூழ்ந்து கொள்ளும் அதே சமயத்தில், கருங்கடல் மார்க்கமாகவும் கிரிமியாவைத் தீவிரமாக எதிர்க்க ஜெர்மனியர் நினைக்கின்றனர். பால்கன் வழியாகவும், துருக்கி வழியாகவும், ரஷிய எண்ணெய்க்கிணறுகளையும், இராக், இரான் எண்ணெய்க் கிணறுகளைச் சூழ்ந்துகொள்ள வேண்டுமென்பது ஜெர்மனியரின் மற்றொரு திட்டம். இதற்கு துருக்கி இடங் கொடுக்குமா? ஜெர்மனியரின் திட்டம் வெற்றி பெறுமா என்பதைப் பொறுத்துப் பார்ப்போம். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்; அச்சு நாடுகளின் வெற்றியோ, நேச நாடுகளின் தோல்வியோ எல்லாம் ரஷியாவைப் பொறுத்திருக்கிறது. இந்த யுத்தத்தின் வெற்றி தோல்வி ரஷியாவில் நிர்ணயிக்கப்பட வேண்டுமேயொழிய வேறெங்குமல்ல; ரஷியா வீழ்ந்தால், ஐரோப்பா மட்டுமல்ல உலகமே வீழ்ச்சியடைய வேண்டியதுதான்!

அங்கும்-இங்கும் ● (முன் பக்கத் தொடர்ச்சி)

திவ்ய தரிசனம்! மீசையில் மண் ஒட்டவில்லை! வந்ததடி வம்பு! – ஒரே ஏப்பம்! பிசாசு வேகம்!

னிடமும் ரஷியாரிடமும் இருக்க வேண்டியது அவசியமாகும். பிரிட்டன் இதில் கவனஞ் செலுத்திவருமென்பதில் சந்தேகமில்லை.

ஃ ஃ ஃ

இந்த யுத்தம் ஆகாய யுத்தம்; ஆகாய யுத்தத்துக்கு விமானப்படைகள் அவசியம்; அதேபோல், தரைப் படைகளும் அவசியம். தரைப் படைகளுக்கு இன்று உயிர்போன்றிருப்பது யுத்த டாங்கிகள். ரஷியாவில், ஜெர்மனியர் இவ்வளவு தூரம் வெற்றி பெற்று முன்னேறியதற்கு விமானப் படைகளும், டாங்கிகளுந்தான் முக்கிய காரணம். யுத்த டாங்கிகள் ஜெர்மனியிடம் ஏராளமாக இருக்கின்றன. ரஷியாவிடமும் பஞ்சமில்லை; ஆனால், ரஷியா இந்த யுத்தத்தில் ஏராளமான டாங்கிகளை இழந்துவிட்டது. ரஷியாவில் மழையும், பனியும் அதிகமாக இருப்பதால், யுத்த டாங்கிகள் ஏராளமாகத் தேவைப்படும். ரஷியா இன்று 'டாங்கி, டாங்கி, ஏராளமான டாங்கிகளைக் கொடுத்துதவுங்கள்!" என்று பிரிட்டனை நோக்கிக் கதறுகிறது! அமெரிக்காவிடமும் டாங்கிகள், விமானங்களைக் கேட்டுக் கதறுகிறது! ஆனால், இதுவரையில் ரஷியாவுக்கு எத்தனை டாங்கிகள், விமானங்கள் போயிருக்கின்றன வென்பது தெரியவில்லை. ஏராளமான டாங்கிகளும், விமானங்களும் ரஷியாவுக்கு கொடுத்துதவ வேண்டும். ஜெர்மனியின் உயிரை வதைக்க வேண்டுமானால், அதற்கு இடம் ரஷியாதான். ரஷியாவை ஜெர்மனியர் ஜெயித்து விடுவார்களேயானால், அப்புறம் ஜெர்மனியை நசுக்க முடியாது. முழு பலத்தை அவர்கள் உலகத்தையே விழுங்கிவிடப் பார்ப்பார்கள்! ஆகவே, ரஷியாவுக்கு நேச நாடுகள் யாவும் உதவிச் செய்ய வேண்டியது அவசியம். உதவிச்செய்யக் கடமைப்பட்டிருக்கின்றன. உதவி கேட்கும் உரிமையும் ரஷியாவுக்கு உண்டு. இந்தச் சந்தர்ப்பத்தில், ஆபத்தான இந்தச் சமயத்தில், ரஷியாவைக் கைவிட்டால், ரஷியாவைக் கொலை செய்வதோடு நிற்காது; தற்கொலை செய்து கொண்டதற்கே ஒப்பாகும்!

ஃ ஃ ஃ

கீவ் வீழ்ச்சியடைந்தது; லெனின்கிராட் ஆபத்தான நிலைமையிலிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைத்தான் ஜப்பான் எதிர்பார்த்து கொண்டிருந்தது. ரஷியா தோல்வியடையுமேயானால், ரஷியா பின்னாலிருந்து முதுகில் குத்த ஜப்பான் பின்வாங்காது! ஜப்பான் அதன் சாமர்த்தியத்தைக் காட்டப் புறப்பட்டுவிட்டது. ரஷியாவைப் பின்னாலிருந்து தாக்க மஞ்சுகோ எல்லைக்கு ஏராளமான துருப்புகளை அனுப்பிவைத்திருக்கிறது சில வாரங்களுக்கு முன் சீனாவிலிருந்து ஏராளமான துருப்புகள் புறப்பட்டுச் சென்றது ஞாபகமிருக்கலாம். அந்தத் துருப்புகள் எல்லாம் மஞ்சுகோ எல்லைக்கே போயிருக்கின்றன. மஞ்சுகோ எல்லையிலிருந்து ரஷியாவின் சைபீரியாப் பிரதேசத்தைத் தாக்கவேண்டுமென்பதே ஜப்பானின் நோக்கம் ஜப்பானின் நோக்கத்தைக் கண்ட ரஷியாவும் ஏராளமான துருப்புகளை மஞ்சுகோ எல்லைக்கு அனுப்பி வருகிறது. வண்டி வண்டியாக ரஷியத் துருப்புகள் மஞ்சுகோ வழியாகப் போய்க்கொண்டிருப்பதாக நேரில் கண்டவர்கள் கூறுகிறார்கள். ரஷியா, ஐரோப்பாவில் எப்படி ஒரு கடுமையான போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறதோ அதேபோல் கிழக்கேயும், அதாவது, மஞ்சுகோ எல்லையிலும் ஜப்பானை எதிர்த்து ஒரு கடுமையான போராட்டத்தை நடத்த முடியும். அங்கு ரஷியாவுக்கு வேண்டிய படைகளும், யுத்த தளவாடங்களும் இருக்கின்றன. மஞ்சுகோ எல்லை யுத்தத்தை நடத்துவதற்கு வேண்டிய யுத்த தளவாடங்களையும் ரஷியர் அந்தப் பிரதேசங்களிலேயே உற்பத்தி செய்து வருகிறார்கள். என்றாலும், ரஷியா இரு புறங்களிலும் இரு பலமான எதிரிகளை எதிர்த்து நிற்கவேண்டியிருக்கிறது. இந்தச் சமயத்தில்தான் ரஷியாவுக்கு உதவி ரொம்ப அவசியம். ரஷியாவுக்கு உதவிச் செய்ய வேண்டுமென வெறும் வார்த்தையளவில் சொல்லிக்கொண்டிருப்பதால் பயனில்லை. ஜெர்மனி, ரஷியாவை ஜெயித்தால், ஐரோப்பாவுக்கு ஆபத்து; ஜப்பான் கிழக்கே ரஷியாவை முறியடித்தால், கீழ் தேசங்களுக்கு ஆபத்து! பஸிபிக் சமுத்திரத்தில், அமெரிக்காவோ பிரிட்டனோ தலைகாட்ட முடியாது கிழக்கேயுள்ள தீவுகளையெல்லாம் ஜப்பான் ஒரேயடியாக ஏப்பமிடத் துணிந்து விடும்! ஆஸ்திரேலியா, மலேயா, பர்மா முதலிய நாடுகள்கூட ஜப்பானுக்கு அஞ்சியிருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆஸ்திரேலியாமீது படையெடுத்து வரக்கூடிய அபாயம் ஏற்பட்டுவிட்டதென்று ஆஸ்திரேலியர் அலறித் துடிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டதென்றால், ஜப்பான் ஆபத்தைப் பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. இதற்கு முன், ஆஸ்திரேலியாவுக்கு அபாயம் என்று யாரும் சொன்னதுமில்லை; கேள்விப்பட்டதுமில்லை. அந்த நிலைமையிலிருக்கக் கூடிய ஆஸ்திரேலியாவையே யுத்த அபாயம் நெருங்கி வருகிறதென்றால், இந்த யுத்தம் எந்தவிதமான பிசாச வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம்!

ஃ ஃ ஃ

எகிப்திலும் யுத்தம் திடீரென ஆரம்பிக்கலாம். டோப்ருக்கில் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. அங்கு விமானச் சண்டை நடந்து வருகிறதேயொழிய, இன்னமும் தீவிரமான யுத்தம் ஆரம்பிக்கவில்லை. ரஷிய யுத்தத்தின் முடிவே, இதர யுத்தங்களின் போக்கைப் பொறுத்திருக்கிறது. ஜெர்மன் ராணுவங்கள் கருங்கடலில் படையெடுத்து, துருக்கி வழியாக இரான், இராக்கை நோக்கி வருமேயானால், எகிப்திலும் யுத்தம் தீவிரமாகலாம்; மத்தியதரக் கடல் யுத்தமும் ஆரம்பிக்கும்; பிரிட்டிஷ் ராணுவங்களை அங்குமிங்கும் சிதறியடிக்க ஹிட்லர் பல இடங்களில் போராட்டத்தை ஆரம்பிப்பார். மத்தியதரக் கடல், ஜிப்ரால்டர், எகிப்து, அட்லாண்டிக், கருங்கடல், இரான், இராக், துருக்கி முதலிய இடங்களில் ஒரேயடியாக போராட்டத்தை ஆரம்பித்தால், பிரிட்டன் இத்தனை இடங்களிலும் ஜெர்மனியரை எதிர்க்கத் தயாராக இருக்க வேண்டும். இன்று, ரஷியா இருக்கும் நிலைமையில் பிரிட்டனும் இருக்குமேயானால், ஜெர்மனி பாடு கொண்டாட்டமாகவே இருக்கும். அந்தக் கொண்டாட்டத்துக்கும், கும்மாளத்துக்கும், இடங் கொடுக்காமல், ஜெர்மனியை, ரஷியாவிலேயே முறியடிப்பதுதான் புத்தி! ரஷியாவில் ஜெர்மனி முறியடிக்கப்படுமேயானால், ஹிட்லர் கருங்கடல் யுத்தத்தைப் பற்றியோ, அல்லது, மத்தியதரக் கடல், இரான் இராக், எகிப்து யுத்தத்தைப்பற்றியோ கனவில்கூட நினைக்கமாட்டார்! இந்த மழை காலம் முடியும் வரையில் ரஷிய எல்லையில் பதுங்கிக் கிடக்கக்கூடிய நிலைமையில் ஹிட்லரை வைத்துவிடலாம். இன்றேல், ஹிட்லர் கிழக்கே வருவது நிச்சயம். கிழக்கே ஒரு பெரிய யுத்தத்தை ஆரம்பிப்பதும் நிச்சயம். கிழக்கே ஒரு பெரிய யுத்தம் வந்தால், ரஷியாவுக்குப் போதிய உதவி கிடைக்குமா என்பது சந்தேகமே! ரஷியா, பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகள் என்ன திட்டம் போட்டிருக்கின்றன; எப்படி ஜெர்மனியை முறியடிக்கப்போகின்றன வென்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

காந்த-ரஸக் குளிகை.

நீரழிவு-குணம்

நீரழிவு, ஓயாத மூத்திரம் வரகுஷி, தாகம், நீரில் சர்க்கரை, ஈ, எறும்பு மொய்தல், கை கால், அசரிக்கை, மயக்கம், இந்திரிய உடைச்சல், நீற்றுப் போதல் மல பந்தம் உடம்பு எரிவு முதலிய சகல நீரழிவு, வெட்டை ரோகத்தை ஒரு வாரத்தில் குணமாக்கி விடுகிறது. உயர்ந்த முறை. 1-புட்டி ரூ 4-8-0.

ஆனந்த குடீரம், பழனி S. I.

"ஒன்றுமில்லை...அவர் இங்கு வருவதாகச் சொன்னார்...இன்னமும் காணவில்லை..."

"நந்தவனத்தில் வேறு எந்த விதமான சம்பவமும் நடக்கவில்லையா?...நீ யாரையும் சந்திக்கவுமில்லையா?..."

"அதுதானே ஆச்சரியமாக இருக்கிறது! ஒரு வெள்ளை உருவத்தைக் கண்டேன்...அவர் மட்டும் என்னுடன் இருந்திருக்காவிட்டால், அந்த உருவத்தைக் கண்டு பயந்து, அலறி அங்கேயே மடிந்திருப்பேன்!..."

"என்ன!...கமலம் அப்பேர்ப்பட்ட உருவமா?..." என்றாள் மோகனா

"ஆம்....அக்கா... அவ்வளவுக்கு அது பயங்கரமாக இருந்தது!..."

"அது யார்?..."

"யாரோ...எனக்குத் தெரியாது"

"அவரைக் கேட்டாயா?..."

"ஆம்...அவராலும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை...அவர் என்னுடனிருந்ததால் அதைப் பின்பற்றிச் செல்லவும் முடியவில்லை..."

மெய்தான்...அதனால்தான் உன்னால் அவர் காரியம் கெட்டுவிட்டதென்று உன்னைக் கோபித்திருக்கிறார்...அவர் சொன்னதில் தப்பு என்ன விருக்கிறது?..."

"ஆம்...கண்ணே...மோகனா, அந்தப் பிடிவாதக் கமலத்துக்கு நீதான் சொல்லு...நான் என்ன சொன்னாலும் அது...அவள்..."

"அக்கா...என் தவறை இப்பொழுது நான் நன்றாக உணருகிறேன...இனிமேல் அவர் வழிக்கே போகமாட்டேன்...என்னால் அவர் தோல்வி யடைந்ததாகச் சொன்னார்..."

"என்ன! தோல்விபடைந்ததாகச் சொன்னாரா?.........அப்படியானால் அது பெரிய தோல்விதான்! இதுவரையில் அவர் எதிலும் தோல்வி யடைந்தது கிடையாதே!..."

"ஆம் அதுதான் எனக்கு ரொம்ப வருத்தம்!...அக்கா...எல்லாம் நன்மைக்கென்றே நினைக்கிறேன்...கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்..."

"மெய்தான்.....கமலம்....ஆனால், அவர் நம்மைத் தேடி வரமாட்டாரா?...நம்மை இந்த நிலைமையிலேயே விட்டுவிடுவாரா?"

"ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார்..."

"மோகனா...கமலம்...என் உங்களுக்கு இந்தச் சந்தேகம்?...அவனை அவ்வளவுக்கு மோசமாகவா நினைத்துக் கொண்டீர்கள்?..."

"இல்லை...பாட்டியம்மா....அக்காவின் நிலைமையை நினைக்கும்போது தான் எனக்கு அவ்வளவு சங்கடமாக இருக்கிறது..."

"ஏன்?...கமலம்...உன் நிலைமை என் நிலைமையைவிட ரொம்ப உயர்வாக இருக்கிறதோ?..."

"அக்கா...நான் கமலம்...சாதாரண கமலம்...நீங்கள் இளவரசி...தஞ்சை இளவரசி...மதுரையின் எதிர்கால ராணி!...உங்களுக்கு ஒரு ஆபத்து வந்தால்..."

"கமலம்...உனக்கு இன்னமும் அந்தக் குறும்புத்தனம் போகவில்லையா?..."

"அக்கா...இதில் குறும்புத்தனம் என்ன இருக்கிறது?...நான் உள்ளதைச் சொன்னேன்..."

வெண் உருவம் யார்?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"இருக்கட்டும்...கமலம்......நாம் வெளியில் போக வேண்டியதில்லை; மூவரும் அந்தரங்க அறைக்குப் போகலாமா?......நெடுநேரமாகி விட்டது...ஒரு வேளை அவர் அந்தரங்க அறைக்கு வந்திருக்கலாம்.

"மூவரும் போக வேண்டுமா?...நான் மட்டும் போய்ப் பார்த்து வருகிறேனே?...'.

"ஏன்?......நாங்களும் வந்தால் என்ன?..."

"ஒரு வேளை நம்மைத் தேடிக்கொண்டு ராணியோ...அல்லது...அந்த விஷமம்...ரஞ்சிதமோ வந்தால்..."

"வந்தால் நீதான் அறையிலிருக்க வேண்டும்..."

"அதுவும் மெய்தான்...மூவருமாகவே போவோம்......வாருங்கள்..." என்று சொல்லிக்கொண்டே கமலம் எழுந்தாள்; பாட்டியும், மோகனாவும் அவளுடன் எழுந்தார்கள். அந்தரங்க அறையின் வாசலைத் திறக்கப் போகும் சமயத்தில், அவர்களுக்கு எதிரே மாய சேவகன் வந்து நின்றான்! புன்சிரிப்புடன் "யாருமே அந்தரங்க அறைக்குப் போகவேண்டாம்!..." என்றான்.

மாயசேவகனைக் கண்டதும் பாட்டி, மோகனா, கமலம் மூவரும் திடுக்கிட்டுப் போயினர்! அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை, மாய சேவகன் உற்றுக் கேட்டிருப்பானோ என்று சந்தேகித்தனர். அவர்கள் சந்தேகத்தை அவர்கள்முகமே காட்டியது. ஆனால், மாய சேவகன் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடக் குறிப்பிடவில்லை.

"அந்தரங்க அறையில் என்ன விசேஷம்?..."

"ஒன்றுமில்லை...உங்களைக் காணவே புறப்பட்டோம்..."

"நானே வந்துவிட்டேன்...இருக்கட்டும்...அறைக் கதவை நன்றாக பூட்டி யிருக்கிறீர்களா?..."

"ஆம், பூட்டியே வைத்திருக்கிறோம்...என்ன விசேஷம்?..."

"ஒன்றுமில்லை...யாராவது உங்களைத் தேடிக்கொண்டு வரக்கூடும்?.."

"யார் வரக்கூடும்?..."

"ராணி...அல்லது......ரஞ்சிதம் வரலாம்?..."

"அவர்கள் இருவரும் வரவேண்டிய அவசியமில்லையே?..." என்றாள் கமலம்.

"கமலம் நீ நினைப்பது தவறு...ரஞ்சிதம் அறையிலிருக்கிறாள்..."

"யார்?...ரஞ்சிதமா?..."

"ஆம்...ரஞ்சிதந்தான்! ... ராணி அவள் அறையிலிருக்கிறாள்..."

"ராணியுமா?...அப்படியானால்...அவள்..."

"வைத்தியர் செய்த வேலைதான்...ராணிக்கு உயிர் கொடுத்துவிட்டார்!..."

"வைத்தியர்...பலே ஆசாமிதான்!..."

"அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளுவோம்...நீங்கள் இரவெல்லாம் விழித்திருக்கிறீர்களே சற்று தூங்கி ஓய்வு எடுத்துக்கொண்டால் என்ன?...விடிந்தபின் உங்கள் முகம் உங்களைக் காட்டிக் கொடுத்துவிடும்..."

"நாங்கள் விழித்திருப்பது இருக்கட்டும்...நீங்கள் ஒய்வு எடுத்துக் கொண்டீர்களா?..."

"எனக்கு எப்பொழுதும் ஓய்வுதான் ... நந்தவனத்திலும்......நான் போகிற இடங்களிலும் நான் ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் திரும்பியதே இல்லை..."

"இப்பொழுதாவது கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டால் என்ன? இப்படியே நாள் கணக்கில் ஓரேயடியாக இரவு பகலாகத் தூங்காமலிருந்தால்..."

"இளவரசி...அப்படி ஒன்றும் எனக்குச் சிரமமில்லை..."

"ஆம்...சிரமமில்லையென்று நீங்கள் சொன்னால்...எங்களுக்குத்தெரியாதா?...நாங்கள் என்ன உணர்ச்சியற்ற மரக் கட்டைகளா?..."

"அது இருக்கட்டும்...என்மீது அவ்வளவு அனுதாபம் ஏற்படக் காரணம் என்ன?..." என்று புன்சிரிப்புடன் கேட்டான் மாய சேவகன். மூவரும் சிரித்தார்கள்.

"உங்களை ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி சொல்லி, உங்களிடமிருந்து சில ரகசியங்களை அறிந்துகொள்ளத்தான் இந்த அனுதாபமெல்லாம்!..."

"அப்படியா?...என்ன ரகசியத்தை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்?...நானே சொல்லிவிடுகிறேன்...அதற்காக நீங்கள் சிரமப் பட வேண்டாம்...'

"எங்களைப் பிடித்த இந்தச் சனியன்தான் என்று தொலையுமோ?..."

"நாள் நெருங்கிவிட்டது..."

"சில தினங்களுக்கு முன்னும் இப்படித்தான் சொன்னீர்கள்..."

"ஆம்...கமலத்தைக் கேட்டுப் பாருங்கள்...அவள் உங்களுக்குப் பதில் சொல்லுவாள்..."

"நான் செய்தது தவறு, அதை ஒப்புக் கொள்ளுகிறேன்...என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்...இப்படிக் குட்டாகச் சொல்ல..."

"கமலத்துக்கு வருத்தம் போதும்!..."

"ஆம், எனக்குப் புத்தி வந்துவிட்டது...என் தவறுக்காகக் கன்னத்தில் வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுகிறேன்..."

"வேண்டாம்...வேண்டாம்...நீ கன்னத்தில் போட்டுக்கொள்ளுவதால் எனக்கு ஆவது என்ன?..."

"ஒன்றுமில்லை...உம்...ஆமாம்...அந்த வெள்ளை உருவம்?..."

"அது பெரிய மாயம்! இனிமேல்தான் நான் அந்த மாயத்தைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது..."

"உங்களுக்குத் தோல்வி என்றீர்களே...அது என்ன தோல்வி?..."

"படுதோல்வி!......அதைப்பற்றி என்னால் இப்பொழுது எதுவும் சொல்ல முடியாது...நாளைக்கு ஒரு வேளை அந்த உண்மை வெளிப்படலாம்..."

"ராணி...ரஞ்சிதம்...இருவரும்."

"அவர்கள் இனிமேல் அழிய வேண்டியதுதான்!......அவர்களுக்கு அவர்களே குழிதோண்டிக் கொண்டிருக்கிறார்கள்!..."

"அப்படியா?......எந்த வழியில் என்பதைச் சொல்லக் கூடாதா?..."

"கமலம் அறிவாள்..."

"எனக்கு விவரமாகத் தெரியாது...நீங்களே சொன்னால்..."

"விவரமாகச் சொல்லக் கூடிய காலம் வரும்...அப்பொழுது சொல்லுகிறேன்......இன்னம் அதற்குக் காலம் வரவில்லை" என்றான் மாய சேவகன். இதற்குள் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டுக் கமலம் முதலியோர் திடுக்கிட்டுப் போயினர். கமலம், அவள் படுக்கையில் குப்புற படுத்துக்கொண்டாள்; இளவரசி மற்றொரு படுக்கையில் படுத்துக்கொண்டாள். பாட்டி கதவைத் திறக்கச் சென்றாள். அவள் கதவைத் திறப்பதற்கு முன், கமலம், இளவரசி முதலியோர் படுத்திருந்த இடத்தைக் கவனித்தாள். அங்கு நின்று கொண்டிருந்த மாய சேவகனைக் காணவில்லை. அவனும் நொடிப்பொழுதில் எங்கேயோ மாயமாக மறைந்துவிட்டான்!

(தொடரும்)

ஹநுமான் ஆருடம்

எதிர்கால சம்பந்தமாக 5 கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 1. ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத ரூ. 3. வாராந்திர பலன் ரூ 10. வி. பி. 0-4-0.

ஜனன விவரம் அல்லது சுமார் வயது, தொழில், எழுதியநேரம் தேவை.

ஹனுமான் ஆச்ரமம்,
திருத்தணி

இரும்புபெட்டி

ஸ்தாபிதம் 1914 டெலிபோன் நெம்பர் 2324

பி. நடேசமுதலியார்

ராவு மில்

59, பிராட்வே, மதராஸ்.

இந்தியா.
தனிப் பிரதி
விலை ஒரு அணா.
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 4-0-0.
இலங்கையில்
தனிப் பிரதி சதம் 7
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா
தனிப் பிரதி 0-1-6.
வருட சந்தா ரூ. 5.
மலாய்
தனிப்பிரதி சதம் 10
வருட சந்தா ரூ. 7.
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

எதிரி சப்மரைய்ன்களை மூழ்கடிக்கும் "டெப்த் சார்ஜ்". பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பலொன்றில், ஜெர்மன் "யு-போட்டு"களை எதிர்க்க "டெப்த் சார்ஜ்"களுடன் தயாராக இருப்பதைப் படத்தில் காணலாம். "டெப்த் சார்ஜ்" செய்ததும் கடலில் ஒரே அமளி ஏற்படும். அந்த அமளி வேகத்தில் கடல் அலைகள், கடலின் கீழுள்ள சப்மரைய்னைக் கடலுக்கு மேலே கொண்டுவந்துவிடும். உடனே அந்த சப்மரைய்ன்களைத் தாக்கிக் கடலில் மூழ்கடிப்பார்கள்.



பிரிட்டிஷ் யுத்தக் கப்பலிலுள்ள 4 அங்குல விமானப் பிரங்கி. எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்த அதில் குண்டுகளைத் தயாராக வைப்பதைப் படத்தில் காண்க.



பிரிட்டனைப் பாதுகாக்கத் தயாராக இருக்கும் பெரிய பீரங்கிகளில் ஒன்று. இந்தப் பீரங்கியை சாதாரணமாக உபயோகிக்க முடியாது; ரயில்வே தண்டவாளம் அமைத்து அதன் மூலமே இந்தப் பீரங்கியை உபயோகிக்க முடியும். அவ்வளவுக்கு வேகமாகவும், பெரும் சப்தத்துடனும் இந்தப் பீரங்கி முழங்கும். இதிலிருந்து பிரிட்டன் பலம் அதிகரித்து வருவதைத் தெரிந்து கொள்ளலாம்.



தென்னாப்பிரிக்கா ஜெனரல் ஸ்மட்ஸ், லெப்டினண்ட் ஜெனரல், சர். பியரே வான் ரினிவெல்டுடன் கெனியாவிலுள்ள பிரிட்டிஷ் படைகளைப் பார்வையிடச் சென்றார். அவர்களைக் கெனியா கவர்னர், லெப்டினண்ட் ஜெனரல், கன்னிங்காம் இருவரும் வரவேற்றனர். கெனியா கவர்னர் மாளிகையில், ஜெனரல் ஸ்மட்ஸும், லெப்டினண்ட் ஜெனரல் கன்னிங்காமும் யுத்தப்படமொன்றைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

Edited Printed and Published by P. ALBIN FERNANDO, at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. MADRAS.